தத்துவபோதினி.

பு. உ]   சென்னைப்பட்டணம் ௧௮௬௫வரு ஜூலை மீ ௭௨.   [இல. ௩.

ஸகலவேதாபிதேயம், ஸத்யஜ்ஞாநாநந்தம் ப்ரஹ்ம, ப்ராணிஸ்ருஷ்டிஸ்திதம், தச்சைவ
உபாஸ்யம், யஸ்தமிச்சதி ஸ்ருதாஸ்ஸம்பதி, ஸ ஏவ ஸர்வம் வேத ஸர்வவித்.

ஸத்யமேவஜயதே நாந்ருதம்.

அட்டவணை.

விஷயங்கள்.

	பக்கம்.		பக்கம்.
௧. கடவுள்துதி	௮௦—௫௭	௮. சரித்திரம்	௭௦
௨. விளம்பரம்	௫௯	௯. வரதவேங்கடசம்வாதம்	௭௧
௩. தத்துவபோதினி	௫௯	௧௦. விவேகவிளக்கம்	௭௩
௪. பிரசினோபநிஷத்து	௬௩	௧௧. ருக்குவேதசம்ஹிதை	௭௭
௫. பகவத்கீதை	௬௪	௧௨. பழமொழிகள்	௭௮
௬. மநுநூல்	௬௬	௧௩. விளம்பரங்கள்	௭௯
௭. திருஷ்டிசாஸ்திரம்	௬௯	௧௪. சந்தாதாரர்கள் அட்டவணை	௭௯

சத்தியமே சக்தி—தத்துவமே சித்தி.

கடவுள்துதி.

பியாகடைராகம் - ரூபகதாளம்.

பல்லவி.

நாந்யம் ஸந்மாவிக்ஷ்யதே - ஜயநாய - நாந்யம் ஸந்மாவிக்ஷ்யதே.

அனுபல்லவி.

யாந்யவக்ஷ்யாநி - ஜ்ஞாநாதாநி
ஸேவிதவ்யாநி - நோபாதராணி......(நாந்ய.)

சரணங்கள்.

க. அஶப்தமஸ்பர்ஶ - மரூபமவ்யயம்
ததாரஸந்நித்ய - மகந்தவச்சயத்
அநாத்யநந்தம் - மஹத꞉பரம்த்ருவம்,
நிசாய்யதம்ம்ருத்யு - முகாத்ப்ரமுச்யதே......(நாந்ய꞉.)

உ. நஸந்த்ருஶேதிஷ்ட - திரூபமஸ்ய
நசக்ஷுஷாபஶ்ய - திகஶ்சநைநம்
ஹ்ருதாமநீஷா - மநஸாபிக்லுப்த꞉
யஏதத்விது - ரம்ருதாஸ்தேபவந்தி...........(நாந்ய꞉.)

ங. ஸயஏஷோ - ந்தர்ஹ்ருதயஆகாஶ꞉
தஸ்மிந்நயம்புரு - ஷோமநோமய꞉
அம்ருதோஹிரண்மய - ஆகாஶஶரீரம்ப்ரஹ்ம
ஸத்யாத்மப்ராணா - ராமம்மநஆநந்தம்.........(நாந்ய꞉)

பொருள்.

பல்லவி.

மோக்ஷத்திற்கு வேறுவழியில்லை. இது (அனேகசுருதிகளில்வரும் வாக்கியம்)

அநுபல்லவி.

எவை பழிப்பற்றதொழில்களோ, அவையே யனுஷ்டிக்கத்தக்கவையேயன்றி, வேறுதொழில்களல்ல. (இது தைத்தரீய உபநிஷத்து வாக்கியம்.)

சரணங்கள்.

க. ஒலியின்றி, பரிசமின்றி உருவின்றி அழிவின்றி, சுவையின்றி, நிலையாக, நாற்றமின்றி யுள்ள தெதுவோ, அதுவே அடியும் ஈறுமற்றது, பெரிதிலும் சிறந்தது, மாறுதது. இதையறிந்தவர் மிருத்தியுவின் வாயினின்றும் தப்புகிறார். (இது கடோபநிஷத்துவாக்கியம்.)

உ. அவனுக்கு நமதுபார்வையில் ரூபமில்லை, அவனை யொருவனும் கண்ணால்காண்கிறதில்லை. புத்தியோடு பொருந்திய ஹிருதயத்தாலும், மனதாலும், அறியத்தக்கவனென்று அறிந்துகொண்டவர்கள் அமிருதராகின்றனர். (இது கடோபநிஷத்து வாக்கியம்.

ங. ஹிருதயமாகிய ஆகாசத்தில் அமிருத சுவபாவத்தையும், பொன்போன்ற ஞானதேஜஸையுமுடைய மனோமயமான புருஷன் இருக்கிறான். அந்தப்பிரும்மம் ஆகாசத்தை சரீரமாகவும், சத்தியத்தை ஆத்மாவாகவும், லீலையைப் பிராணனாகவும், ஆநந்தத்தை மனதாகவும் உடையவன். (இது தைத்தரீய உபநிஷத்து வாக்கியம்.)

விளம்பரம்.

இந்தச் சென்னைத் தத்துவபோதினியை வாங்க மனமுடையவர்கள் மயிலாப்பூரில் தத்துவபோதினி அச்சுக்கூடத்தில் வேதஸமாஜத்தின் ஏஜண்டாகிய, கா. தெய்வசிகாமணி முதலியாருக்கு எழுத்து மூலமாய்த் தெரிவித்துக்கொள்ளவேண்டியது.

இதற்குச் சந்தாவிவரம்.

சென்னைப்பட்டணத்தி லுள்ளவர்கள் வருஷம் ஒன்றுக்கு ரூபாய்...................... ௧ - ௮ - 0

அதற்கு வெளியிலுள்ளவர் தபால் கூலியுடன் சேர்த்து வருஷம் ஒன்றுக்கு ரூபாய். ௨ - 0 - 0

பத்துப்பிரதிகளுக்கு அதிகமாய் வாங்கும் வெளியிலுள்ளவர்கள் தபால்கூலியுடன்சேர்த்து வருஷம் ஒன்றுக்கு ரூபாய்...................... ௧ - ௧௨ - 0

இதற்குச் சந்தாதார்கள்தங்கள்சந்தாக்களை யந்தந்த வருஷத்தில் முன்பணமாய்க் கட்டவேண்டியது. மேமாசத்துக்கு மேமாசம் இதற்கு வருஷமாய்க்கொள்ளவேண்டியது. வருஷம் நடுவில் வாங்கத்தொடங்குவோர் வருஷத்திய சந்தாவும் கொடுக்கவேண்டும்.

வெளியிலிருந்து சந்தா அனுப்பவேண்டியவர்கள் தபால் முத்திரைகளனுப்பலாம். ஆனால், அப்படி யனுப்பப்படும் முத்திரைகளை மாற்றுவதற்காக, ரூபாய் ஒன்றுக்கு - ஒரு அணு வீதம் வட்டம்சேர்த்து அனுப்பவேண்டியது.

இந்தப் பத்திரிக்கையின் சந்தாதாரர்களும், பங்குக்காரர்களும், இடம் மாறும்போது அந்தவிவரத்தைத் தயைசெய்து ஏஜண்டுக்குத் தெரிவிக்கவேண்டியது.

தத்துவபோதினி.

சோதரர்களே! கடந்தபத்திரிகையில் ஞானசம்பாதன மார்க்கத்தைக்குறித்து யோசிக்கையில் பற்றற்ற விசாரத்தினால் விளையத்தக்க நன்மைக்கு பாஷாவிருத்தியை திருஷ்டாந்திகரித்தோமல்லவா? சம்ஸ்கிருதபாஷை வியவஹாரத்திலில்லாமல் கேவலம் கிரந்தத்தி லிருக்கின்றமையாலும்; அதை வியவஹரிக்கும் சிலரும் அதில் அன்னிய பாஷைகளின் மொழிகள் கலப்பதினால் அதின் அழகும் பாரிசுத்தியமும் குன்றிப்போமென்று நினைக்கின்றமையாலும்; அது இப்போதிருப்பதைக் காட்டிலும் அதிக விருத்தியடையுமென எதிர்பார்க்கக்கூடவில்லை. இங்கிலீஷோவெனில், அது நாமறிந்த மற்ற பாஷைகளை காட்டிலும் சர்வசிரேஷ்டமானதாகிலும், இனியும் அது அடையக்கூடியசிறப்பிற்கு எல்லை கூறிமுடியாது. இனி சம்ஸ்கிருதப்பயிற்சியினால் விளையத்தக்க பயனெல்லாம் கூடி இருவகையனவாம். முதலாவது, அதைக் கற்பதினால் பூர்வீகக் கிரந்தங்களிற் செப்பியிருக்கும் பொருள்களை யறிந்துகொள்ளுதல்; இரண்டாவது, அதின் உதவியால் பிருகிருதத்தில் நமது தேசத்தில் வழங்கிவரும் பலபாஷைகளும் விருத்தியடைதல். இனி எவ்விடத்திலாவது வியவஹாரபாஷையாக விருக்குமென எதிர்பார்க்கக்கூடாத சம்ஸ்கிருதத்தை இங்கிலீஷுடன் ஒப்பிடுவதைக்காட்டிலும், பிரகிருதத்தில் வழக்கத்திலுள்ள ஒரு பாஷையைக்குறித்து யோசிப்பது பிரயோஜன காரியாயிருக்குமாகையால், தமிழை திருஷ்டாந்திகரிப்போம். நமது கருத்தை விளக்கச்சொற்களும், சொற்களை விளக்க எழுத்துக்களும் ஆதியில் இடுகுறியாய் ஏற்பட்டபோதிலும், நமது கருத்துக்களுள் ஒன்றுக்கொன்று சம்மந்தா சம்மந்தங்களுண்டாகுந்தோறும், சொற்களிலும் சம்மந்தா சம்மந்தங்கள் ஜனிக்கும். கடவுளானவர் உலகத்தில் உருவங்களைப் படைத்ததுமன்றி அவற்றின் விஷயத்தில் நமக்கு ஞானத்தை யுண்டாக்க கண்ணையும் அளித்தாரல்லவா? இவ்விஷயத்தில் உத

வும் இந்திரியத்துக்கு கண்ணெனும் இடுகுறிப்பெயரையிட்ட போதிலும், பிறகு சம்மந்தங்களை யோசித்து அதின் தொழிலுக்குக் காண் என்னும் வினையையும, அத்தொழிலின் விஷயத்திற்குக் காட்சியென்னும் பெயரையும், நாம் உண்டாக்கிக் கொண்டோம். சற்று யோசிப்பவருக்கு இத்தன்மையான எண்ணிறந்த திருஷ்டாந்தங்கள் கிடைக்கும். எத்தேசத்திலும் ஆதியில் அத்தியாவசியகமான பொருள்களுக்கும் தொழில்களுக்கும் மாத்திரம் பெயர்களிருக்கும்; பிறகு அனுகூல்யங்களும், போகங்களும் விருத்தியாகுந்தோறும், அவற்றின் சம்மந்தமாக அனேக புதியஅபிப்பிராயங்கள் ஜனிக்குமாகையால், அவற்றை விளக்க சொற்களை யுண்டாக்கிக்கொள்ள வேண்டிய தாவசியகமாகும். இதற்குரிய மார்க்கமென்னவெனச் சற்று விசாரிப்போம். அந்தந்த பாஷைக்குரிய பகுதி விகுதி முதலிய உறுப்புக்களை இணைத்து சிறியதாயும், அழகாயும், குற்ற மற்றதாயும் இசைந்தவனாயில், புதிய சொற்களை சிருஷ்டித்துக்கொள்வது உசிதமாகும். திருவிளி, துடைப்பம், செலவு, முதலியபகுபதங்களும், காரணப்பெயர்களும் இதற்கு உதாரணங்களாகும். அந்தப்பாஷைகளிலே செம்மையாய்சிருஷ்டித்து முடியாத பக்ஷத்தில், அவற்றின் தாய்ப்பாஷையின் சகாயத்தைப்பெறவேண்டியது. இதற்கிரண்டு மார்க்கங்களுண்டு: முதலாவது, ஆவசியகமான கருத்துக்களை விளக்கத் தாய்பாஷையில் நல்ல சொற்களுண்டெனில் அவற்றை இடுகுறியாக மதித்துக்கொள்ளலாம். இல்லெனில் அதின் உறுப்புக்களை இணைத்துப் புதிய சொற்களைச் செய்துகொள்ளலாம். ஆகிலும் ஒவ்வொருபாஷையிலும் சப்தோத்பாதக சக்திக்கு ஒருபரிமிதியுண்டு. அதைக்கடந்துசப்தங்களைச் சிருஷ்டிப்போமாகில் அதினால் கருதியபயனில்லாமற் போவதுமன்றி, விசேஷபாதகங்களும்ஜனிக்கும். இதற்கிரண்டு உதாரணங்கள்கூறுவோம். இங்கிலீஷில் ஆக்ஸிஜன்என ஒரு பாரிபாஷிக பதமுண்டு. அது ஒருவகை வாயுவுக்குப்பெயராம். இந்த இங்கிலீஷ் மொழியை அப்படியே வழங்கிக்கொள்ள மனமின்றி, பதார்த்தவிக்கியான சாஸ்திரத்தை மஹாராஷ்டிரத்திலெழுதிய பொம்பாயிலுள்ள சிலபண்டிதர்கள், இதற்கு "பிராணப்பிரத" என்று பெயரிட்டார்கள். இப்பெயரைக் கேட்டவர்கள், அதற்கு பிரும்மமென்றும், தாய் தந்தைகளென்றும், இன்னும் பற்பல பழுதான கருத்தையடையும்படி நேரிடுகிறதேயன்றி, அது ஒருவாயு விசேஷத்தைக் குறிப்பதென அறிந்துகொள்ளக்கூடாமற்போகிறது. அயலாரைக் கேட்டறிந்துகொள்ளலாமெனில், இங்கிலீஷ்பண்டிதர்களும், மற்றப்பண்டிதர்களும் திருத்தமான கொள்கையளிக்க ஒருங்கஅசமர்த்தராயிருப்பார்கள். அவ்விஷயத்தில் இவ்விங்கிலீஷு மொழியையே வழங்குவதினால் ஒரு பக்ஷத்தில் அதின்கருத்தேவிளங்காவிடினும், பிசகான கொள்கையுண்டாக இடமிராது. அன்றியும், அதின்கருத்து முற்றும் விளங்காதவனாயில் அயலாரைக் கேட்டறிந்து கொள்ள வேண்டுமென்கிற புத்தி ஜனிக்கும்; இங்கிலீஷ் பண்டிதரும் அதின்கருத்தைவிளக்கவல்லவரா யிருப்பார். இதுநிற்க, கான்வெக்ஸ்லென்ஸு என்னும் இங்கிலீஷு பதத்துக்கு மேற்குறித்த பண்டிதர்கள், "சோளபாஹியாகாரவர்த்துல வக்கிரிணி" யென்று பெயரிட்டிருக்கிறார்கள். கடியாரக்கண்ணாடியைப்போல் இருபுறமும் மேடாயிருக்கும் கண்ணாடிக்கு கான்வெக்ஸ்லென்ஸு என்றுபெயர். இந்தமொழிபெயர்ப்பு "பிராணப்பிரத" என்னும்சொல்லுக்குரியஆக்ஷேபங்களுக்கெல்லாம்உட்பட்டிருப்பதுமன்றி, அழகைக்கெடுக்கத்தக்கவும், கலவரமுண்டாக்கத்தககவும் வெகு நீண்ட தொடர்மொழியா யிருக்கின்றதல்லவா? இத்தன்மையான தொடர் மொழிகளைவழங்குவதாலும், சங்கிரகமானபரிபாஷைகளை வழங்காமையாலுமே யல்லவா, அன்னியதேசத்தார் ஒருவருஷகாலத்தில் வெகு தெளிந்த ஞானமடைகின்ற தர்க்கத்தில் நம்மவர் பன்னிரண்டு வருஷம் செலவழித்தும், கடைசியில், தர்க்கம் கற்றவருக்கும், முற்றும் கல்லாதவருக்கும், பேத மில்லாமற் போகிறது. சாதாரணமாய் "கல்தச்சன் உளியினால் கல்லைத் துளைத்தான்" என்பதை நம்ம தார்க்கிகர்

கள் சாஸ்திர மரியாதையை அனுசரித்
துச் சொல்லப் புகுங்கால் "எப்படிப்ப
"ட்ட ரூபத்தை யுடைத்தா யிருந்தால்
"ஒரு கறுத்த, கெட்டியான, உருக்கக்கூ
"டாத, த்ருடமான, பளுவான பிரதிவிவி
"சேஷத்தில் தன் தொழிலாகிய வெட்டு
"தல் என்னும் வியாபாரத்தின் ஒருவிசே
"ஷத்தைச்செலுத்துமோ அப்படிப்பட்ட
"கறுத்த, கெட்டியான, உருக்கக்கூடிய, த்
"ருடமான, பளுவான, இன்னொரு பிரதி
"விவிசேஷத்தால் செய்யப்பட்ட நீண்ட
"சவுக்கமான தட்டையான கூரான ஒரு
"ஆயுத விசேஷத்தால் ஒரு காரிய விசே
"ஷத்தைச் செய்து ஒரு ஆக்ம விசேஷ
"த்தை யிருக்கச்செய்யும் ஜடாஜட சம்
"மந்தமான துவிஜத்துவ விசிஷ்டமான
"கரசரணாதி அவயவங்களையுடைய ஒரு
"பதார்த்த விசேஷம் கறுப்பாயும் கெட்
"டியாயும் உருக்கக்கூடியும் த்ருடமாயும்
"பளுவாயுமுள்ள ஒரு பிரதிவி விசேஷ
"த்தால்செய்யப்பட்டநீண்டசவுக்கமான
"தட்டையான கூரான ஒரு ஆயுதவிசே
"ஷத்தின் ஒரு வியாபார விசேஷத்தை
"கறுத்த கெட்டியான உருக்கக் கூடாத
"த்ருடமானபளுவானதிரண்டு உருண்டு
"நீண்ட ஒரு பிரதிவி விசேஷத்தில் செ
"லுத்தினனெ" ன்று சொல்லுவார்கள்.
இது தமிழிலே இவ்வளவு தெளிவாயிரு
க்குமாகில், இன்னசொல் இன்னவிடத்தி
லே வரவேண்டுமென்கிற நியம மில்லா
த சம்ஸ்கிருதத்தில் அதை யுரைத்தால்
கேட்கவேண்டியதே யில்லை யல்லவா? ந
ன்ருய் தர்க்கம் கற்றவர்கள் இந்த வாக்கி
யத்தை நோக்குவார்களாகில், அதில்இன்
னம் பலசொற்கள் குறைவா யிருக்கின்ற
மையால், அவ்வியாப்தி, (அண்டிஸ்டிரிபி
யூஷன்) அதிவியாப்தி (அன்லிமிடெட்
டு) என்னும் தோஷங்கள் விசேஷமாயி
ருப்பதா யுரைப்பார்கள். எத்தன்மையா
ன பண்டிதரும் இந்தத்தோஷங்களின்றி
ஒரு வாக்கியத்தை முடிப்பது அருமை
யாகையால், ஒரு சபையில் வாக்கியார்த்
தம் செய்யக்கூடுகிற இரண்டு பண்டிதர்
கள் ஒருவருடன் ஒருவர் சொல்லுக்கு
மல்லாடி, கண்டசோஷணம் செய்து அ
ந்தவாக்கியத்தை முடிப்பதிற்குள் இர

ண்டு மூன்று தினமாகிவிடுமாகையால்
வாதமே அவ்வளவுடன் முடிந்துபோ
கும். இவ்வாறு அயலாரைப் பிரமிக்கச்
செய்ய அனுசரித்த இந்த மார்க்கமான
து அவர்களுக்கே பாதகமாய் முடியுகிற
து. கடைசியாக பதினைந்துவருஷம் சிரம
ப்பட்டு தர்க்கங்கற்று சாந்திசெய்தபண்டி
தரை நோக்கி, அவ்வாக்கியத்தின் பொரு
ளைத் தமிழிலாவது, சாதாரண தெளிவா
ன சம்ஸ்கிருதத்திலாவது விளக்கவேண்
டுமென்போமாகில், அப்படிச் செய்தல்
அசாத்திய மென்பார்கள். தர்க்கத்தின் உ
த்தேசியமெல்லாங் கூடி காரியகாரணசம்
மந்தம் பிழையின்றி யிருக்கிறதா இல்லை
யாவென்றறியவேண்டியதேயல்லவா? இ
ப்படிக் கிருந்தும் தார்க்கிகர்களைக் காட்டி
லும் சாதாரணமானவர்கள் அதைத் தெ
ளிவாயறிந்துகொள்வார்களெனில் அதை
நம்புவது எளிதாயிராது. தங்கள் பெ
யர்களை வெளியிட்ட முப்பத்தொருபண்
டிதர்களும், பெயரை வெளியிடமனமிரா
த அநந்த பண்டிதர்களுங் கூடி யியற்றிய
வேதஸமாஜ கண்டனமென்னும் ஒரு புத்
தகத்தில் "பிரும்மம் மூர்க்கியம், நாம் அ
"மூக்கியாள், ஆகையால் பிரும்மமே அர்
"ச்சை, அர்ச்சையே பிரும்மம்" என்கிற
ஒருபராமர்சவாக்கியம் (ஸில்லொஜிஸம்)
இருக்கிறது. சடிதம்வெளுப்பாகையால்கி
ணற்றில் நீரில்லை யென்பதற்கொப்பாகிய
மேற்கண்ட வாக்கியத்தின் பொருளென்
ன, அதின் அவயவங்க (பிரமிஸெஸ்) ளு
டைய சம்மந்த மெப்படிப்பட்டது, என்
று பண்டிதர்களைக்கேட்போமாகில், சம்பி
ரதாயமாய்ப் படித்து சாஸ்திர மரியாதை
யை அறிந்துகொள்ளாத நமக்கு அதை
விளக்குவதும் அசாத்தியம். நாமதை அ
றிந்துகொள்ளுவதும் அசாத்தியம்என்பா
ர்கள். மூன்றுமாதம் இங்கிலீஷ் தர்க்கம்
படித்தவரைக் கேட்போமாகில், இதில் ப
க்ஷம், (மைநர்டரம்) சாத்தியம், (மேஜர்ட
ரம்) ஹேது, (மிட்டில்டரம்) என்னும் மூ
ன்று பதங்களைக்காட்டிலும் அதிக பதங்க
ளிருக்கின்றமையால், அவற்றிற்குச் சம்ம
ந்தமேயுண்டாகாதென்றும், ஆகையால்சி
த்தாந்தமேற்படாதென்றும், இந்தப்பிழை
க்கு அஸம்பவம் (இரண்டு மிட்டில்டரம்)

என பெயரொன்றும் தெளிவா யுரைப்பார். ஒரு ஜாதியின் (ஜீனஸ்)விஷயத்தில் ஸாதிக்கத்தக்க தர்மங்களையும், வியாபாரங்களையும், அந்தஜாதியின் அவாந்தரங்கள் (ஸ்பீஷீஸ்) ஒவ்வொன்றின் விஷயத்திலும் சாதிக்கலாம் என்பதுதான்தர்க்கத்துக்கெல்லாம் மூலநியாயமாகும். எப்படியெனில் "புகையுள்ளதெல்லாந்தீயுள்ளது" என்பதைஅனைவரும் உண்மையானதென்று எளிதில் அறிந்துகொள்ளத்தக்கது. இதில் "தீயுடைமை" என்னும்விசேஷணம் (பிரீடிகெட்)புகயுடைய ஜாதியின்சகல அவாந்தரங்களிடத்திலும் வியாபித்திருக்கிறது. (டிஸ்டிரிபியூடெட்) இனி அடுப்பிலும், "தீயுடைமையை" சாதிக்க வேண்டியபோது, "புகையுடைமை"என்னும் ஸாமானியதர்மத்தின் (அனலொஜியின்) உதவியினால், அடுப்பை புகையையுடைய ஜாதியின் ஒரு அவாந்தரமென்றுஸ்தாபித்துவிடுவோமாகில், மேகுறித்த ஜாதியின் சகல அவாந்தரங்களிடத்திலும்வியாபித்ததர்மம், அடுப்பினிடத்திலும்பிரவர்த்திக்கவேண்டுமென்சாமானியவிதியால்ஏற்படுமாகையால், அடுப்புந்தீயுடையதென்கிறநிகமனம்(கன்கிளுஷன்) ஏற்படும். இதில் "புகையுள்ளதெல்லாம் தியுள்ளது" என்பதற்கு பிரதிக்கினை (மேஜர்பிரமிஸ்) என்றுபெயர். "அடுப்பு புகையுடையதெ" ன்பதற்கு ஹெதுவாக்கியம் என்றுபெயர் (மைனர்பிரமிஸ்). ஆகையால் "அடுப்பு தீயுடையதெ"ன்பதற்கு நிகமனமென்றுபெயர். பிரதிக்கினையிலுள்ள விசேஷணத்துக்கு ஸாத்தியமென்று பெயர். எதினிடத்தில் அந்த விசேஷணத்தை ஸ்தாபிக்க வேண்டியதோ அதற்கு பக்ஷமென்றுபெயர். பக்ஷத்துக்கும் சாத்தியத்துக்கும் சம்மந்தத்தை விளக்கும் பதத்துக்கு ஹேதுவென்றுபெயர். ஒவ்வொரு பராமர்சவாக்கியத்திலும், இந்த மூன்று அவயவங்களும் ஆவசியகமேயன்றி, அவற்றிற்கதிகமிருந்தாலும், குறைவாயிருந்தாலும், நிகமனமேற்படமாட்டாது. மேற்குறித்த நம்மபண்டிதர்களுடைய பராமர்ச வாக்கியத்தினால், அர்ச்சையென்னும் பக்ஷத்தினிடத்தில் பிரும்மமென்னும் சாத்தியத்தை ஸ்தாபிக்க அவர்கள் முயலுகிறார்கள். இதிலுள்ள பழுதுகளோவெனில், முதலாவது, நாலவயவங்களிருக்கின்றன. இரண்டாவது, இந்நான்கு அவயவங்களிலும், ஹேதுவில்லை. மூன்றாவது, முக்கியாமுக்கியத்துவத்தையே ஹேதுவென்னும் பக்ஷத்தில், அதில் ஒன்று அன்னுவயியாகவும், (அபர்மெடிவ்) ஒன்று வியதிரேகியாகவும் (நெகிடிவ்) இருக்கிறது. நாலாவது, அர்ச்சையென்னும்சொல் நிகமனந்தவிர மற்றெந்த அவயவவாக்கியத்திலும்வரவில்லையாகையால், அதின் விஷயத்தில் யாதொரு சித்தாந்தமும் ஏற்படமாட்டாது. சுருதி ஸ்மிருதிகளில் யாதொரு ஆதாரமும்மில்லாமல் நமது தேசத்தில் நுழைந்தவாறே அர்ச்சையானது பூர்வ அவயவ வாக்கியங்களில் யாதொரு சம்மந்தமுமின்றி நிகமனத்தில்மாத்திரம் வந்துநுழைந்தது வெகுவிந்தையாகவிருக்கிறது. இங்கிலீஷ்தர்க்கத்திலும் அனேகவகை பராமர்சை வாக்கியங்களிருக்கினும், அவற்றையெல்லாம் மேற்குறித்த மாதிரியாகச செய்துகொண்டு, வெகு எளிதில் யுக்தாயுக்தங்களை யறிந்து கொள்ளலாம். இத்தியாதி ஹேதுக்களால் சொற்களுக்குப்பதில் அனுவசியகமான நீண்டவாக்கியங்களை வழங்குவதினால் விளையத்தக்க சங்கடங்கள் நன்றாய்விளங்குமென நம்புகிறோம். இன்னும் இவ்விஷயத்திற்கிரண்டொரு திருஷ்டாந்தங்களை யுரைப்பது நலமாயிருக்குமாகையால், வருகிற பத்திரிகையில் அதைத் தொடர்ந்து விசாரிப்போம். தர்க்கசம்மந்தமாய் இவ்விடத்தில் செய்த பிரஸ்தாபத்தை இங்கிலீஷ் தார்க்கிகர்கள் எளிதில் அறிந்துகொள்ளும்பொருட்டு, பரிபாஷைகளுக்கு இங்கிலீஷில் வழங்கும் சொற்கள் அவ்வவ்விடத்தில் உபவாக்கியபிந்துக்களுள் எழுதப்படுகிறது.

சிலநாளாய் விவேக விளக்கமென ஒரு தமிழ்ப்பத்திரிகை சென்னையில் பிரசுரமாகி வருவது அனைவருக்கும் தெரிந்திருந்திருக்கலாமென நம்புகிறோம். இந்த ஜூன்மாதத்திய விவேக விளக்கத்தில் சிலாகிக்கத்தக்க சஞ்சிகையொன்றைக் க

ண்டோமாகையால், அதை நம்மவரனைவரும் படித்து ஆநந்திக்கும் பொருட்டு, இத் தத்துவபோதினியில் அதை யெடுத்துப் பதிப்பித்திருக்கிறோம். அதின் குணதோஷங்கள் அதைப்படிப்பதினாலே விளங்குமாகையால், அதைக்குறித்து இவ்விடத்தில் விசேஷித்துரைக்கவேண்டியதில்லையென நம்பி இவ்வளவுடன் முடிக்கிறோம்.

பிரசினோபநிஷத்து.

௫-வது பிரஸ்னை.

பின்னிட்டுசிபிபுத்திரனாகிய சத்தியகாமர், ஓ, பகவானே! ஒழிவில்லாமல்எவன் பிரணவத்தைத் தியானம்பண்ணுவானோ, அவன் அதினால் எந்த லோகத்தை அடைவானென்று, அவர்கேட்கிறார். அதற்கு ஓ சத்தியகாமனே! இந்தப் பிரணவமென்கிறதுதான் பரமாயும், அபரமாயுமிருக்கிற கிரந்தம், ஆகையால் வித்துவான் இந்த இரண்டில் ஒன்றை அடைவான், அவனொருமாத்திரைக் காலமாய்த் தியானம்பண்ணுவானேயாகில், அதினால் ஞானபிரகாசத்தையடைந்து சீக்கிரம் ஜகத்திலுண்டாகிறான், அவனை ருக்குகள் மனுஷிய லோகத்தை சேர்ப்பிக்கிறதுகள், அவ்விடத்தில் தபஸ்ஸினாலும் பிரம்மசரியத்தினாலும், சிரத்தையினாலும், சம்பூர்ணனாய் மாஹாத்மியத்தை அனுபவிக்கிறான். அதற்கு த்விமாத்திரா காலத்தால் மனஸில் தியானிப்பானேயானால் அவன் அந்தரிக்ஷத்தை அடைந்து யஜுஸ்ஸுகளினால் அவன் சோமலோகத்தை அடைவிக்கப்படுகிறான், அவன் சோம லோகத்தில் ஐசுவரியத்தை அனுபவித்து மறுபடி வந்து சேருகிறான், ஆனால் எவன் இந்தப் பிரணவத்தினால் திரிமாத்திராகாலத்துடன் பரம புருஷனைத் தியானம்பண்ணுகிறானோ, அவன் சூரியதேஜஸ்ஸில் அபிப்பிரவிஷ்டனாய் ஸர்ப்பமானது தோலை விட்டுவிடுகிறதுபோல் அவன் பாபத்திலிருந்து நீங்கினவனாய் சாமங்களால் பிரம்மலோகத்துக்கு அனுப்பப்படுகிறான், அவன் இந்த உயர்ந்த ஜீவஸமூகத்தைக்காட்டிலும், உயர்ந்தவனாயிருக்கிற (ஹிருதய) புரத்தில் சயனித்திருக்கிற புருஷனைப் பார்க்கிறான், தத்விஷயமாய் இரண்டு சுலோகங்க ளிருக்கிறதுகள், மிருத்தியுமதிகளான மூன்று மாத்திரைகள் ஒன்றோடொன்று கலந்திருந்த போதிலும், கலக்காமல் பிரயோகிக்கப்பட்டபோதிலும் (தியானார்த்தம்) நிர்ணீதமா யிருக்கிறதுகள், பாஹியமாயும் ஆந்தரியமாயும் மத்தியமமாயுமிருக்கிற கிரியைகளைச்சரியாய் உபயோகப்படுத்தும்போது ஞானிகள் நடுங்குகிறதில்லை. ருக்குகளால் இதையும் (இந்த லோகத்தையும்) யஜுஸ்ஸுகளால் அந்தரிக்ஷத்தையும், ஸாமங்களால் கவிகள் எதை (பரப்பிரும்மஸ்தானமாக) அறிவிக்கிறார்களோ அதையும் (அடைகிறார்கள்). இந்தப்பிரணவமென்கிற ஆலம்பத்தால் வித்துவான் அதையும் சாந்தமாயும், ஜராமரணமில்லாமலும், பயமில்லாமலும், உத்கிருஷ்ட மாயும் எதிருக்கிறதோ அதையும் அடைகிறான் (என்று சிலோகார்த்தம்) விடையுரைத்தார்.

௬-வது பிரஸ்னை.

பிறகு பரத்வாஜபுத்திரனாகிய சுகேசன் அவரை நோக்கி ஓ பகவானே! கோஸலதேசத்து இராஜபுத்திரனாகிய ஹிரணியனாமனென்பவர் என்னை ஓ பாரத்துவாஜரே! பதினாறுகளையுள்ள புருஷனை அறிவீரா வென்றுகேட்டார். நாரத குமாரனைப்பார்த்து, எனக்கு இதுதெரியமாட்டாது, தெரிந்தால் உமக்குச் சொல்லாமலிருப்பேனோவென்று நான்சொன்னேன். (ஏனென்றால்) அநீதத்தைச் சொல்லுகிறவன் வேருடன்கூட உலர்ந்து போவான், ஆகையால் அநீதத்தைநான் சொல்லத்தகாது, (பின்பு) அவர் யாதொன்றும் சொல்லாமல் இரதத்தில் ஏறிப்போய் விட்டார், அந்தப்பிர்சினத்தை உம்மைக் கேட்கிறேன். இந்தப்புருஷன் எங்கேயிருக்கிறார் சொல்லும் என்று கேட்டார். அதற்கு அந்த ருஷி, ஓ, சௌமியனே! அந்தப்பதினாறுகளையும்அடங்கியிருக்கிற புருஷன் இவ்விடத்தில் தானேசரீரத்துக்குள் ளிருக்கிறான், அவன் எது கிளம்பும்போது நான்வெளியில் கிளம்புவேன், எது நிற்கும்போது நானும் நிற்பேனென்று தியானித்தான். அவன் பிராணத்தை உண்டாக்குகிறான். பிராணத்தினின்றும், சிரத்தையையும், ஆகாசத்தையும், வாயுவையும், ஜோதிஸ்ஸையும், அப்பையும், பிருதிவியையும் இந்திரியத்தையும், மனஸ்ஸையும், அன்னத்தையும், அன்னத்தினின்றும் வீர்யத்தையும், தபஸ்ஸையும், மந்திரங்களையும், கர்மத்தையும், லோகங்களையும், லோகங்களில் ஸஞ்ஞையையும் (இப்படி உண்டாக்கினான்). இந்த ஸமுத்திரகாமினிகளான ஆறுகள் பிரவஹித்துக்கொண்டு ஸமுத்திரத்தில் விழுந்தபின்பு பேரும் உருவுமில்லாமல் எப்படி ஒன்றாய்ச் சேர்ந்து சமுத்திரமென்றுமாத்திரம் சொல்லப்படுகிறதுகளோ, அப்படியே இந்தசாக்ஷியாய்ப்பார்க்கிற புருஷனுடையவிஷயத்தில் இந்தப்புருஷ காமினிகளானபதினாறுகளைகளும் புருஷனை அடைந்துஅவ்விடத்திலேயே போகிலயித்து பேரும் உருவுமி

ல்லாமல் புருஷனென்றுமாத்திரம் சொல்லப்படுகிறன்றன ; அந்த இவன்களையில்லாதவனும், மரணமில்லாதவனுயு மிருக்கிறான். (அந்தவிஷயத்தில் சிலோகம்) அரங்கள் உருளாயில்போல் கலைகள் எவனுக்குள் அடங்கியிருக்கிறதுகளோ, அந்த அறியவேண்டிய புருஷனை உங்களுக்கு மிருத்தியுபயமுண்டாகாமலிருக்கும்பொருட்டு அறியுங்கள் (என்று சுலோகம்), என்றுசொன்னார். அவர்களைப்பார்த்து அப்போது அந்த ருஷி (பிப்பலாதர்), இவ்வளவுமட்டுந்தான். இந்தப் பரப்பிரும்மத்தைநானறிவேன் ; இதற்குமேல் யாதொன்றுங்கிடையாதென்று சொல்லுகிறார். அப்போது அந்த ருஷிகள் அவரைப்பூஜித்து இந்தஅஞ்ஞானத்தினுடைய அக்கரையில் எங்களைசேர்ப்பித்திரே நீர்தான் எங்களுடைய தகப்பனார்(என்று சொன்னார்கள்.) பரமர்ஷிகளுக்கு நமஸ்காரம்.

பகவத்கீதை

௧௦ வது அத்தியாயம்.

கிருஷ்ணன்சொல்.

௧. ஓ புஜபலமுடையவனே ! நான் சந்தோஷப் படுகிற உன் பொருட்டு நன்மை செய்யவேண்டுமென்னும் விருப்பத்தால் மறுபடியும் உத்கிருஷ்டமான எந்தவாக்கியத்தைச் சொல்லுகிறேனோ அதைக் கேட்பாயாக.

௨. மகர்ஷிகளும் என்னுடைய உத்பத்தியை யறியார்கள் ; தேவசமூகங்களும் அறியமாட்டார். நான் தேவர்களுக்கும் மகர்ஷிகளுக்கும் சர்வவிதத்திலும் முதன்மையானவன் அல்லவா ?

௩. ஆதியற்றவனும், பிறப்பற்றவனும், ஜகதீசுவரனும் ஆக என்னை எவன் அறிகின்றானோ அவன் ஜனங்களுக்குள் மவுட்டியமற்றவனாக, சர்வபாபங்களினின்றும் விடப்படுகிறான்.

௪. புத்தி, ஞானம், நிர்மோகம், பொறுமை, சத்தியம், தமம் (பாகியேந்திரிய நிக்கிரகம்), சமம் (அந்தரிந்திரிய நிக்கிரகம்) சுகம், துக்கம், உத்பத்தி, நாசம், பயம்,

௫. நிர்ப்பயம், அஹிம்சை, சமசித்தம், சந்தோஷம், தபஸு, தானம், கீர்த்தி, அபகீர்த்தி, ஆகிய நாநாவிதமான தன்மைகள் பிராணிகளுக்கு என்னாலேயே உண்டாகின்றன.

௬. பூர்வத்தில் சப்தருஷிகளும், ஸ்வாயம்புவாதி மனுக்களும், என்னுடைய மனோபாவத்தால் பிறந்தார்கள் ; இவர்களால் லோகத்தில் இந்தப் பிரஜைகள் உண்டயினர்.

௭. எவன் இந்த என்னுடைய அளவிறந்த தன்மையை யதார்த்தமாய் அறிகிறானோ அவன் சஞ்சலமற்ற யோகத்தை அடைகின்றான்; அதற்குச் சந்தேகமில்லை.

௮. நான் சமஸ்தமான ஜகத்துக்கும் கர்த்தன் ; என்னால் சமஸ்தமும் பிரவர்திக்கின்றது என்று நினைத்து சமபாவத்தையுடைய பண்டிதர்கள் (மேற்சொன்ன) கருத்தோடு என்னை பஜிக்கிறார்கள்.

௯. என்னிடத்தில் மனதுடையவர்கள் என்னையுற்ற பிராணமுள்ளவர்களாய்ப்பரஸ்பரம் தெரிவித்துக்கொண்டவர்கள் ஆகியென்னைக் கீர்த்தித்து எப்பொழுதும் சந்தோஷித்து ரமிக்கின்றனர்.

௧௦. நித்தியமாய்ப் பிரியாத பிரீதிபூர்வகமாக யார்பஜிக்கிறார்களோ அவர்களுக்கு அந்த ஞானயோகத்தைக் கொடுக்கிறேன். அந்தயோகத்தினாலேயே அவர்கள் என்னையடைகிறார்கள்.

௧௧. அவர்களுக்கே தயைசெய்யும் பொருட்டு அபிப்பிராயப்படும் நான் பிரகாசிக்காநின்ற ஞான விளக்கினால் அவிவேகத்தால் பிறந்த அஞ்ஞானத்தை நசிக்கச்செய்கிறேன்.

அர்ஜுனன் சொல்.

௧௨. நீ உத்கிருஷ்டமான பிரம்மம் ; உத்கிருஷ்டமான தேஜஸ்ஸு ; உத்கிருஷ்டமான பாவனம், உன்னைப் புருஷனாகவும், நித்தியனாகவும், பிரகாசிக்கிறவனாகவும் ; ஆதிதேவனாகவும், பிறப்பற்றவனாகவும்,

௧௩. தேவர்ஷியாகிய நாரதனும், அஸிதனாகிய தேவலனும் அப்படியே வியாசனும் சமஸ்தமான ருஷிகளும் உன்னை மேற்கண்டபடி சொல்லுவார்கள். நீயும் அவ்வாறே சொல்லுகிறாய்.

௧௪. ஓ கேசவா! என்னை நோக்கி நீசொன்ன இந்த சமஸ்தத்தையும் சத்தியமாக நினைக்கிறேன். ஓ பகவானே ! உன்னுடைய மகிமையை தேவர்களும் ராக்ஷசர்களும் அறியார்கள்.

௧௫. பிராணிகளை விருத்தி செய்கிறவனும் பிராணேசனும், தேவர்கட்கு தேவனும், ஆகிய ஓ புருஷோத்தமனே நீ உன்னாலேயே உன்னை யறிகின்றனை.

௧௬. உனது மகிமா விசேஷம் பிரகாசிக்கிறதல்லவா ? எந்தமாகாத்மிய விசேஷத்தினால் இந்த லோகத்தை வியாபிக்கச் செய்து நீயிருக்கின்றனையோ அந்த மாகாத்மிய விஸ்தாரத்தை சேஷமில்லாமல் சொல்லத்தக்கவன்.

௧௭. ஓ யோகி! நான் எவ்வாறு உன்னை எப்பொழுதும் தியானிப்பவனாய் அறிவேன். ஓ பகவானே! எந்தெந்த வஸ்துக்களில் என்னால் நீ தியானிக்கத்தக்கவனாகிறாய்.

கஅ. ஓ ஜனார்த்தனா! உன்னுடைய யோகத்தையும், ஐசுவரியத்தையும், சவிஸ்தாரமாக மீண்டும் சொல்லுவாய். அமிருதத்தைக் கேட்டும் எனக்குத் திருப்தியுண்டாகாது.

கிருஷ்ணன்சொல்.

ககூ. ஓய் குரு சிரோஷ்டனே! பிரகாசிக்கா நின்ற என் மாகாத்மிய விஸ்தாரங்கள் எவையுண்டோ அவைகளை முக்கியமாக நின் பொருட்டுச் சொல்லுகிறேன். என்னுடைய விஸ்தார விபூதிக்கு அந்தமில்லை.

உ0. ஓ அர்ஜுனா! நான் சர்வபூத ஹிருதயங்களிலேயும் (தியானிக்கப் படத்தக்கவனாக) இருக்கின்றனன். பரமாத்ம சுவரூபன், பிராணிகளுக்கு சிருஷ்டிஸ்திதிலயகாரணனும் நானே.

உக. ஆதித்தியர்களுக்கெல்லாம் விஷ்ணுவும்நானே; சோதிகளுக்கெல்லாம், கிரணங்களையுடைய சூரியனும்நானே; மருத்துகளுக்குள்ளே மரீசியும்நானே; நட்சத்திரங்களில் சந்திரனும்நானே.

உஉ. வேதங்களில் சாமவேதமும்நானே; தேவர்களுக்குள் இந்திரனும் நானே; இந்திரியங்களுக்குள் மனதும்நானே; பிராணிகளுக்குள்ளே (பகுத்தறிவுள்ள) சேதனன் நானே.

உங. ருத்திரருக்குள்ளே சங்கரனும்; யக்ஷரக்ஷஸ்ஸுகளில் குபேரனும்; வசுக்களிலே அக்னியும்; சிகரங்களில் மேருபர்வதமும்நானே.

உச. ஓ பிருத்வீபுத்திரா! புரோஹிதர்களில் என்னை முக்கியமான பிரஹஸ்பதியாக அறிவாய்; சேனாநாயகருக்குள் கந்தன்; சரஸ்ஸுகளிலே சமுத்திரனாகிறேன்;

உரு. மகார்ஷிகளுக்குள்ளே நான் பிருகு; வாக்குகளுக்குள் ஒன்றாகிய ஓம்காராக்ஷரம் ஆகின்றேன். யக்கியங்களுக்குள் தியான யக்கியமாகின்றேன்; ஸ்தாவரங்களில் ஹிமாலயமாகின்றேன்;

உசா. எல்லா விருக்ஷங்களிலும் அரசமரம்; தேவர்ஷிகளுக்குள் நாரதன்; கந்தர்வரில் சக்கிராதன்; சித்தர்களிலே கபிலமாமுனி ஆகிறேன்.

உஎ. குதிரைகளுக்குள் அமிருத்த்தோடு பிறந்த உச்சைஸ்ரவஸம், கஜ சிரேஷ்டங்களுக்குள்ளாக ஐராவதம்; மனுஷியர்களுக்குள் அரசன் நானென்று அறிவாய்.

உஅ. ஆயுதங்களிலே வச்சிராயுதம்; தேனுகளிலே காமதேனு நான்; (பிராணிகளை)ப்பிறப்பிக்கச்செய்யும் மன்மதன் நான்; சர்ப்பங்களில் நான் வாசுகியென்னும் ஸர்ப்பராஜன்.

உகூ. நாகருக்குள் அநந்தனென்னும் நாகராஜன் நான்; ஜலதேவருக்குள் வருணன் நான்; பிதிருதேவருக்குள், அரியமன்; தண்டிப்பவருக்குள் யமராஜன்;

ஙO. தைத்தியருக்குள்ளாக பிரக்லாதன்; கணக்கிடுபவர்களுள் காலம்; மிருகங்களுக்குள் சிம்மராஜன்; பக்ஷிகளுக்குள் கருத்மந்தன்;

ஙக. பரிசுத்த கரங்களுக்குள்ளாக நான் வாயு; சத்திரதாரிகளுக்குள்ளாக நான் ராமன்; மச்சியங்களுக்குளளாக மகரம்; நதிகளுக்குள்ளாக கங்கையும் நானே;

ஙஉ. சிருஷ்டிகளுக்கு ஆதியும் மத்தியமும் அந்தமும்நானே, வித்தைகளுக்குள் பரமாத்மாவை யறியும் வித்தை நானே. வாதிக்கிறவர்களுள் தர்க்கவாதம் நான்.

ஙங. அக்ஷரங்களிலே அகாரம் நான்; சமாச சமுதாயத்தில் துவந்துவசமாசம் நான்; அழிவற்றகாலமும் நான்; கர்மபலதாயகனாகி யெங்கும் முகமுடைய பிரம்மாவும் நான்.

ஙச. சமஸ்த மரமான மிருத்தியு தேவதையும் நான்; உத்பத்தி யாகத்தக்கவர்களுடைய உத்பத்தியும் நான்; ஸ்திரீகளுக்குள் கீர்த்தியும் லக்ஷுமியும் நான்; வாக்கில், நினைப்பு, புத்தி, தைரியம், பொறுமையும் நான்;

ஙரு. சாமங்களுக்குள் பிருகத் சாமம்; சந்தஸ்ஸுகளுக்குள்ளே காயத்திரி நான்; மாசங்களுக்குள் மார்க்க சிர்ஷம்; ருதுக்களுக்குள் வசந்தருது;

ஙசா. மோசங்களிலே சூதாடல் ஆகிறேன்; தேஜோமயமானவற்றின் தேஜஸ்ஸு நான்; சாத்விகாளுடைய சத்வகுணம்நான்; சயம் நான்; சிரத்தை நான்;

ஙஎ. யாதவர்களுக்குள்வாசுதேவன், பாண்டவர்களுக்குள்ளாக அர்ஜுனன் நான்; முனிகளுக்குள்ளாக வியாசன் நான்; கவிகளுக்குள் பார்க்கவன் நான்;

ஙஅ. தண்டிக்கிறவர்களுடைய தண்டமும் நான்; ஜயிக்க விரும்புவோர் ஜயோபாயந்தியும் நான்; ரகசியங்களிலே மவுனம்நான்; ஞானவந்தாளுடைய ஞானமும் நான்;

ஙகூ. ஓ அர்ஜுனா! சமஸ்த பூதங்களுக்கும் உத்பத்திகாரணமெதுவோ அதுவும் நான்; சராசரங்களாகிய பூதங்களுக்குள் என்னாலன்றி உண்டாயிருப்பது, ஒன்றுமில்லை.

சO. ஓ பரந்தபா! என்னுடைய திவ்வியமான மாகாத்மியவிஸ்தாரங்களுக்கு முடிவில்லை; இந்த விபூதி விஸ்தாரம் சம்க்ஷேபமாக என்னால் சொல்லப்பட்டது.

சக. லோகத்தில் ஐசுவரியயுக்தமானவும் காந்தியுக்தமானவும், உச்சாகத்தோடு கூடியது எதெதுண்டோ அதெல்லாம் என்னு

டைய தேஜோபாகத்தினுல் பிறந்ததென்றே நீ யறிவாய்.

௪௨. ஓ அர்ஜுனு! ஆனுலும் உனக்கு விஸ்தாரமான (இந்த விபூதி) ஞானத்தினுல் என்ன (பிரயோஜனம் : இவையெல்லாம் ஒருவாக்கியத்துக்குள் அடங்கும் அதாவது) எனதோர் அம்சையினுலேயே என்றுல் (சர்வபூத சுவரூபமாகிய பிரகிருதியினுலேயே) சமஸ்தமான இந்த ஜகத்தை வியாபிக்கச் செய்திருக்கிறேன்.

மநு நூல்

முதல் அத்தியாம் தொடர்ச்சி.

௧0௨. அடிதொடங்கி பிராமணனும் மற்றச்சாதியாரும் தத்தமர்க்குரிய தொழிலே அறிதற்பொருட்டு புத்தியிற்சிறந்த ஸ்வாயம்புவ மனுவானவர் இந்த நூலே உண்டுபண்ணினுர்.

௧0௩. கற்றறிந்த பிராமணன் வருத்தப்பட்டாவது இதைக் கற்கவேண்டியது. மாணுக்கர்களுக்கும், குற்றமறக் கற்பிக்கவேண்டியது. மற்ற எந்தச்சாதியானுக்கும், பிறர்க்குக்கற்பிக்கிற அதிகாரங் கிடையாது.

௧0௪. இந்த நூலேப் படித்து இதிற்சொல்லிய ஒழுக்கத்தை அனுஷ்டானஞ்செய்துகொண்டுவருகிற பிராமணனே அவனுடைய மனமொழி மெய்களின் தொழில்களாலுண்டாகும் பாவங்கள் என்றென்றைக்கும் பற்றுவாம்.

௧0௫. (இந்த நூலேப் படிப்பவன்)பங்தியையும் அவனுடைய வமிசத்தாருள்முன் ஏழு பிறப்பினரையும், பின் ஏழு பிறப்பினரையும், சுத்தராக்கிறுன். அவன் ஒருவனுயிருந்தாலும் இந்தப் பூமிமுழுவதையும் பெறத்தக்கவனுகிறுன்.

௧0௬. இது, விரும்பிய பயன் அழிந்துபோகாமற்காப்பது மிகவுஞ் சிறந்தது, புத்தியை விர்த்திசெய்விப்பது, இது புகழைத்தருவது, ஆயுளேத்தருவது, முத்தியைத்தருவது, உயர்ந்தது.

௧0௭. இந்தநூலில் தருமம் முழுவதும் சொல்லப்பட்டிருக்கிறது. தொழில்களுடைய குணமும் குற்றமும் நாலுவருணங்களுக்குள் தொன்றுதொட்டுவருகிற ஒழுக்கமும் சொல்லப்பட்டிருக்கின்றன.

௧0௮. ஒழுக்கமானது சிறந்த அறம, வேதத்திற்சொல்லப்பட்டது. ஸ்மிருதிகளிலுஞ் சொல்லப்பட்டது. ஆதலால், தான் நன்மையை அடையவேண்டுமென்று விரும்புகிற இருபிறப்பன் நாள்தப்பாமல் எப்போதும் ஒழுக்கத்தை அனுஷ்டித்துக்கொண்டு வரவேண்டியது.

௧0௯. ஒழுக்கத்திலிருந்து வழுவின விப்ரன் வேதத்தின் பயனேப்பெறமாட்டான். ஒழுக்கத்தோடுகூடினவன் அந்தப்பயனே குறைவறப்பெறுவன்.

௧௧0. இப்படி ஒழுக்கத்தினுலேயே தர்மத்தை அடையக்கூடுமென்பதை ருஷிகள் அறிந்து தவம் எல்லாவற்றிற்கும் அடிவேராகச் சிறந்த ஒழுக்கத்தை ஏற்றுக்கொண்டார்கள்.

௧௧௧. உலகத்தினுடைய உற்பத்தியையும், (சாதகர்மமுதலிய) சடங்குகள் செய்யவேண்டிய விதியையும், (பிரமசாரியாயிருப்பவன்) விரதங்களேச் செய்யவேண்டிய முறைமையையும், குருவிற்குச்செய்யவேண்டிய பணிகளின் வகையையும், அந்த ஆச்சிரமத்தைநீக்கி கிரகஸ்தாச்சிரமத்தில் புகுவதற்காகச் செய்யவேண்டிய சடங்குகளின் விதியையும்,

௧௧௨. பொதுவாக விவாகத்தின் தன்மையையும், பலவகையான விவாகங்களின் தன்மையையும், மாவேள்விகள் செய்யவேண்டிய முறைமைகளேயும், தொன்றுதொட்டு இறந்தவர்க்குச் செய்துக்கொண்டு வருகிற சடங்குகளின் முறைமையையும்,

௧௧௩. பொருள் சம்பாதித்தற்காகச் செய்யப்பட்ட தொழில்களின் இலக்கணத்தையும், இல்வாழ்வோன் செய்யவேண்டிய விரதங்களேயும், தின்னத்தகுவனவற்றையும் தகாவனவற்றையும், மனிதர்களும், வஸ்துக்களும் சுத்தி யடைகிறவிதத்தையும்,

௧௧௪. பெண்களின் ஒழுக்கத்தையும், தவஞ்செய்யவேண்டிய முறைமையையும், முத்தியையும், துறவறததையும், அரசனுக்குரிய தருமமெல்லாவற்றையும், கடன் கொடுத்தால் வாங்குதல் முதலியவைகளில் அரசனுற் செய்யப்படும் தீர்ப்பையும்,

ககடு. சாக்ஷிவிசாரணை செய்வதையும் கணவன், மனைவி இவர்கள் ஒருவருக்கொருவர் செய்துக்கொள்ளவேண்டிய கடமைகளையும், சொத்துக்கள் விபாகஞ்செய்துகொள்வதைக் குறித்த ஏற்பாடுகளையும், சூதாடுதலையும், திருடர்முதலானவர்களைத் தண்டிக்கிறவிதங்களையும்,

ககசு. வைசியர்கள், சூத்திரர்கள் இவர்களுடைய தருமங்களையும், சங்கிர்ண சாதியார்களுடைய உற்பத்தியையும், இடுக்கண் நேரிட்டகாலத்தில் உயிரைக்காத்துக்கொள்வதற்காக எல்லாவருணத்தாரும் செய்யவேண்டிய கடமைகளையும், பிராயச்சித்தவிதியையும்,

ககஎ. வினைப்பயனுகி மூவ்விதமாகிய ஜென்மமெடுத்தலையும், முத்தியையும், தொழில்களுடைய குணகுணங்களையும்,

ககஅ. தொன்றுதொட்டு வருகிற தேசவொழுக்கங்களையும், சாதியொழுக்கங்களையும், குலவொழுக்கங்களையும், பாஷண்டிக் கூட்டங்களுடைய கடமைகளையும், மனுவானவர் இந்த நூலில் சொல்லியிருக்கிறூர்.

கககூ. எப்படி முன்னே மனுவானவர் என்னால் கேட்கப்பட்டு இந்த நூலைச் சொல்லினரோ அப்படியே நீங்களும் என்னிடத்திலிருந்து இதை அறியுங்கள்.

முதல் அத்தியாயம் முற்றிற்று.

இரண்டாவது அத்தியாயம்.

க. எந்தத் தர்மமானது வேதமறிந்தவர்களால் மதிக்கப்பட்டும், விருப்பு, வெறுப்பு இல்லாதவர்களாகிய பெரியோர்களால், இடைவிடாமல் மனதில் உறுத்தப்பட்டும் இருக்கிறதோ அந்த தர்மத்தை அறியுங்கள்.

உ. விஷயங்களில் பற்றுவைத்தல் சிறப்பன்று. அடியோடே விரும்பாமையும் இங்கேகிடையாது. வேதத்தைப்படித்தலும், வேதத்திற்சொல்லிய கருமங்களைச் செய்தலும் விருப்பத்தினுலேயே அல்லவா?

ங. கர்மமானது சங்கற்பத்தினுலுண்டாவது; வேள்விகள் சங்கற்பத்தினுலுண்டாவன; விரதங்களும் நியமதருமங்களும் எல்லாம் சங்கற்பத்தினல் உண்டானவைகளாகவே நினைக்கப்பட்டிருக்கின்றன.

ச. இவ்வுலகத்தில் ஓரிடத்திலும் எப்படிப்பட்ட செய்கையும் விருப்பமில்லாதவனுக்குக்காணப்படவில்லை. எந்தெந்தக் காரியத்தைச் செய்கிறனே அதுதுவிருப்பத்தின் தொழிலாகவேயிருக்கிறது.

ரு. பயன்களில் விருப்பம் வையாமல் அந்தக் கடமைகளைச் செம்மையாய்ச் செய்பவர் சாவில்லாத பதத்தை அடைவர்; இவ்வுலகத்திலும் தாம் கருதியபடி விரும்பினதையெல்லாம் அனுபவிப்பர்.

சு. வேத முழுவதும், ஸ்மிருதிகளும், சீலமும், அவைகளை அறிந்தவர்களாய் சாதுக்களாயிருப்பவர்களுடைய ஒழுக்கமும், (மற்றவிஷயங்களில்) தன்னுடைய இன்பமும் தருமங்களுக்கெல்லாம் மூலமாயிருப்பன.

எ. மனுவினல் எது எவனுக்குத்தருமமாகச் சொல்லப்பட்டிருக்கிறதோ அதுவெல்லாம் வேதத்திற் சொல்லப்பட்டது. அவர் ஞானமெல்லாம் வடிவுகொண்டு வந்தவரல்லவா?

அ. இது எல்லாவற்றையும் அறிவுள்ளவன் ஞானக்கண்ணினுற்கண்டு வேதப்பிரமாணத்துக்கு அனுகுணமாகத் தன்னுடைய தர்மத்திலேயே இருக்கக்கடவன்.

கூ. வேதத்தினுலும், ஸ்மிருதிகளினுலுஞ் சொல்லப்பட்ட தர்மத்தை அனுஷ்டானஞ்செய்கிற மனிதனிந்த லோகத்தில் புகழை யடைகிறுன். லோகாந்தரத்திற்சென்று எல்லாவற்றிலுஞ் சிறந்த சுகத்தை யடைகிறுன்.

க0. சுருதியென்பது வேதமென்றறியக்கடவது. ஸ்மிருதி யென்பது தர்மசாஸ்திரம். அவைகளை எவ்விஷயத்திலும் குதர்க்கமாக ஆக்ஷேபம் செய்யக்கூடாது. அவைகளிலிருந்துதான் தர்மமானது குறைவறவிளங்கினது.

கக. இருபிறப்பாளனுகிய எவனுவது நாஸ்திக நூல்களைக்கொண்டு அந்த இரண்டு மூலங்களையும் தாழ்வென்று தர்க்கித்தால், அவன் சாதுக்களால் வெதாழி க்

தகனென்றும், நாஸ்திகனென்றும், பஹிஷ்காரம் செய்யத்தக்கவன்.

௧௨. வேதம், ஸ்மிருதி, பெரியோரொழுக்கம், இன்பம், இந்நான்கும், தருமத்துக்குப் பிரமாணமாயிருப்பன.

௧௩. பொருளிலும், இன்பத்திலும் பற்றில்லாதவர்க்குக் கருமஞானமானது, விதிக்கப்படுகிறது. தருமத்தை அறிய விரும்புவோர்க்கு வேதமே சிறந்தப்பிரமாணம்.

௧௪. எங்கே ஒரு சுருதிக்கு மற்றொரு சுருதி விரோதப்படுகிறதோ அவ்விடத்தில் இரண்டும் தருமங்களாக நினைக்கப்படுகின்றன. புத்திமான்களால் ஆராய்ந்து சொல்லப்பட்ட இரண்டும்நன்மையையே பயக்குமவை.

௧௫. வேதத்தில் இந்த வாக்கியங்களிருக்கின்றன. “சூரிய னுதித்தபின் யாகத்தைச்செய்க” “சூரியனுதிக்குமுன்யாகத்தைச்செய்க” “சூரியனாவது நக்ஷத்திரங்களாவது கண்ணுக்குத்தெரியாமலிருக்கிறகாலத்தில் யாகத்தைச்செய்க” ஆகையினாலே முக்காலத்திலும், செய்யலாமென்பது துணிவு.

௧௬. எவனுக்கு கருத்தரித்தல்முதல் அந்தகர்மம் முடிவாக மந்திரங்களைக்கொண்டே சடங்குகள் நடக்கவேண்டிய விதி கூறப்பட்டிருக்கிறதோ அவனுக்கே இந்த நூலைப் படிக்கவும், கேட்கவும் அதிகாரமுண்டு. மற்றெவனுக்குங் கிடையாது.

௧௭. எந்த தேசமானது தேவநதிகளாகிய ஸரஸ்வதி, திருஷந்துவதி, இவைகளுக்குநடுவிலிருக்கிறதோ, அந்த தேவநிர்மிதமான தேசத்தை, பிர்ம்மா வர்த்தமென்று சொல்லுகிறார்.

௧௮. அந்தத்தேசத்தில், எந்த ஒழுக்கமானது, எல்லா வருணங்களுககுள்ளும், சங்கீர்ண ஜாதிகளுக்குள்ளும், தொன்றுதொட்டு பரம்பரையாய் வருகின்றதோ அதுவே ஸதாசாரமென்று சொல்லப்படுகிறது.

௧௯. குருக்ஷேத்திரமும், மச்சிய தேசமும், பாஞ்சாலம் அல்லது கன்னியாகுரி தேசமும், சூரஸேனகமும், இவைகளெல்லாம் சேர்ந்து பிரமரிஷியென்று சொல்லப்பட்ட ஒருதேசமாகின்றன; அது பிரமா வாத்தததுக்குச் சிறிது தாழ்ந்தது.

௨0. இந்தக் குருக்ஷேத்திரத்தில் பிறந்த பிராமணனிடத்திலிருந்து பூமியிலுள்ள மனிதரெல்லாரும் தம்தம் ஒழுக்கத்தைத் திருத்திக்கொள்ளக்கடவர்.

௨௧. இமயமலைக்குத் தெற்கிலும் விந்தியமலைக்கு வடக்கிலும், (ஸரஸ்வதிநதி மறைந்தவிடமாகிய) வினசனத்திற்குக்கிழக்கிலும், பிரயாகைக்கு மேற்கிலுமுள்ள தேசத்திற்கு மத்திய தேசம் என்று பெயர்.

௨௨. மேற்சொல்லிய மலைகளுக்கு நடுவில் கிழக்குமேற்குச் சமுத்திரங்கள் வரைக்கும் பரவியிருக்கிற தேசத்தை ஆரியாவர்த்தமென்று பெயருடையதாகப் புலவர் அறிகிறார்கள்.

௨௩. எவ்விடத்தில் கிருஷ்ணஸாரம் என்று சொல்லப்பட்ட மிருகமானது இயற்கையாக இருக்கிறதோ அதுதான் யாகம் செய்யத்தகுந்த தேசம். அதற்குப்புறத்திலிருப்பதெல்லாம் மிலேச்சதேசம்.

௨௪. இருபிறப்பாளராயிருப்பவர்ளந்த முயற்சிசெய்தாவது மேற்சொல்லிய தேசங்களை வந்து அடையக் கடவர்கள். தொழில் அகப்படாமல் வருந்துகிற சூத்திரன் (அதைச்சம்பாதிக்கிற நிமித்தம்) வேறு தேசத்திலும் வாசஞ் செய்யலாம்.

௨௫. இவ்வாறு, தருமங்களுண்டான விதமும் உலக உற்பத்தியும் சுருக்கமாக உங்களுக்குச் சொல்லப்பட்டன. இனி வருணங்களுடைய தருமங்களை அறிக.

௨௬. இருபிறப்பாளருக்கு நிஷேகமுதலாகிய சரீர சம்ஸ்காரமானது வேதஸம்பந்தமான புண்ணிய கருமங்களால் செய்யத்தக்கது ; அது இருமையிலும் சுத்தியைத்தருவது.

௨௭. கர்ப்பம் தரித்திருக்கிற காலத்தில் செய்யப்பட்ட சடங்குகளாலும் ஜாதகருமம், சௌளம், உபநயநம், இவைகளாலும் இருபிறப்பாளருக்குப் பிதாவினுடையரேதோதோஷத்தினாலும் மாதாவினுடைய கர்ப்பதோஷத்தாலும், உண்டாயிருக்கிற பாவமானது நீக்கப்படுகிறது.

௨௮. இந்தத்தேகமானது வேதமோதுதல், பல விதவிருதங்கள், ஓமங்கள், நிவாவித்தியம் என்று சொல்லப்பட்ட விரதம், தேவர்கள், ருஷிகள், பிதிர்க்கள், இவர்களைநோக்கிச்செய்யும் தர்ப்பணம், புதல்வரைப்பெறுதல் இவைகளாலே பிரமத்தை அடையத்தக்க யோக்கியதையுடையதாகச் செய்யப்படுகிறது.

௨௯. ஆண்குழவிக்குக் கொப்பூழறுப்பதற்கு முன்னும் சாதகருமம் விதிக்கப்படுகிறது. பொன், தேன், நெய், இவைகளையும் மந்திரத்தோடு புசிப்பிக்கவேண்டியது.

௩0. பிறந்த பத்தாம் நாளிலாவது, பன்னிரண்டாம் நாளிலாவது, நல்ல திதியிலாவது, நல்ல முகூர்த்தத்திலாவது, சுகுணமாகிய நக்ஷத்திரத்திலாவது, நாமகரணம் செய்யவேண்டியது.

௩௧. பிராமணனுடைய பெயரில் முன்பங்கானது சுபத்தையும், அரசனுடைய பெயரில் முன்பங்கானது வலிமையையும், வைசியனது பெயரில் முன்பங்கானது தனத்தையும், சூத்திரனது பெயரில் முன்பங்கானது இழிவையும், தெரிவிக்கவேண்டியது.

௩௨. பிராமணனுடைய பெயரில் பின்பங்கானது சுகத்தையும், க்ஷத்திரியனுடைய பெயரில் பின்பங்கு காத்தலையும், வைசியனுடைய பெயரில் பின்பங்கு புஷ்டியையும், சூத்திரனுடைய பெயரில் பின்பங்கு வணக்கத்தோடு சேவித்தலையும், தெரிவிக்கவேண்டியது.

௩௩. பெண்களுடைய பெயரானது எளிதில் உச்சரிக்கப்படுவதாயும், கொடுமையான பொருளில்லாததாயும், தெளிவான பொருளுடையதாயும், அழகானதாயும் மங்களமானதாயும் நீண்ட உயிரெழுத்தைக் கடையிலுடையதாயும்; ஆசீர்வாதச்சொல்லைப் போன்றதாயும், இருக்கவேண்டியது.

திருஷ்டிசாஸ்திரம்.

திருஷ்டிசாஸ்திரமென்பது ஒளியின் குணங்களையும் ஒரு கண்ணாலாவது இரண்டு கண்களாலுமாவது, பார்த்தலாகிய தொழிலின் தன்மையையும், அதைச் சேர்ந்த விதிகளையும், தெரிவிக்கிற ஒரு நூலாக இருக்கிறது. ஒளியானது, வஸ்துக்களினின்றும் புறப்பட்டு (நம்முடைய கண்ணுக்குள் புகுந்து) அவைகளை நாம் பார்ப்பதற்குக் கருவியாகிற ஒரு பதார்த்தம். கண்ணுக்கு விஷயமான பதார்த்தங்கள் எல்லாவற்றையும் இருவகையாகப் பிரிக்கலாம்; தம்மொளியால் விளங்குவன வென்றும், பிறவற்றினொளியால் விளங்குவன வென்றும். ஆசுவனி முதலான நட்சத்திரங்கள் பலவிதமான சோதிகள், இவைகளெல்லாம் தம்மொளியால் விளங்குவன. இவைகளை நாம் பார்ப்பதற்குக் கருவியான ஒளியானது இவைகளினிடத்திலேயே உண்டாய் வருகிறது. சந்திரன், சுக்கிரன், சனிமுதலான கிரகங்களும், மண், கல், மரம், செடி முதலியவைகளும், பிறவற்றின் ஒளியால் விளங்குவன. அவைகளினின்றும் நம்மிடத்திற்கு வருகிற ஒளியானது அவைகளிலேயே உண்டானதல்ல. சூரியன், விளக்கு முதலியவற்றினின்றும், புறப்பட்டு சந்திரன் முதலியவற்றின்மேல் விழுந்து அங்கிருந்து திரும்பி நம்மிடத்திற்கு வருவது. பிறவற்றால் விளங்குவதான ஒரு பதார்த்தமானது தன்னைப் போன்ற மற்றொன்றினின்றும் வருகிற ஒளியைத் தான் பெற்று அதைத் தன்னைப்போன்ற வேறொரு பதார்த்தத்தின் மீதுசெலுத்தலாம். ஆனால் எல்லாவிஷயத்திலும் ஒளியானது தன்னொளியால் விளங்குகிற வஸ்துக்களிலே தான் ஆதியில் உண்டாகிப் பரவியிருக்கவேண்டியது. ஒரு வத்தியைக் கொளுத்தி ஒரு இருட்டறையில் கொண்டுவந்தால் எரிகிற விளக்கின் வடிவானது அதினின்றும் வருகிற ஒளியினாலே தெரிகிறது. அந்த அறையில் இருக்கிற மற்ற வஸ்துக்களோவெனில் விளக்கினின்றும் வருகிற ஒளியைத் தாமடைந்து அதையே மறுபடியும் திருப்புதலினால் நம்முடைய கண்களுக்கு விஷயமாகின்றன. இன்னும் இதரமான வஸ்துக்கள் தங்கள்மேலே விளக்கு வெளிச்சம், நேராக விழாமற்போனாலும், இறப்பு சுவர்கள் இவைகளிலிருந்து திரும்புகிற ஒளியினால் கண்ணுக்குத் தென்படுகின்றன. வஸ்துக்கள் தம்மொளியினால் விளங்குவனவாயிருந்தாலும் பிறவற்றின் ஒளியால் விளங்குவனவாயிருந்தாலும், தாம் எந்தவர்ணமோ அந்தவர்ணமுள்ள ஒளியையே செலுத்துகின்றன. சிவப்புஜ்வாலையும் பழுக்கக்காய்ந்த வஸ்துவும் சிவப்பான ஒளியையேதருகின்றன. ஒரு சிவப்புத் துணியானது சூரியனிடத்திலிருந்து தான் பெறுகிற வொளி வெண்மையானதாயிருந்தாலும், சிவப்பான ஒளியையே தருகிறது. இருவகைப் பதார்த்தங்களுள்ளும், அ

வற்றின் மேற்புறத்தில் கண்ணுக்கு விஷயமாகும் படியான ஒவ்வொரு ஸ்தானத்திலிருந்தும் எந்தெந்த திக்கிலிருந்து அந்தஸ்தானத்தைப் பார்க்கக்கூடுமோ அந்தந்த திக்குகளிலெல்லாம் ஒளியானது செலுத்தப்படுகின்றது.

ஒளியானது ஓடும்போது பாம்புமுதலியவற்றைப்போல் வளையாமல் நேராக ஓடுகின்றது. அப்படி ஓடுகிற நேர்க்கோடு ஒவ்வொன்றிற்கும் ஒளிக்கிரணம் என்றுபெயர். ஒரு இருட்டறையில் சுவரில் மிகவும் நெருக்கமாயிருபக்கங்களிலுந் தெரியும்படி ஓர் துளைசெய்தால், சூரியன் ஒளியானது அத்துளைவழியாக வந்து சூரியனுக்கு நேரெதிராயிருக்கிற ஓரிடத்தில் விழும். அந்த ஒளிவிழுகிற இடமும், துளையின் நடுவும், சூரியனுடைய மத்தியும், ஒரே நேர்க்கோடிலிருப்பன. அதனால் ஒளிக்கிரணங்கள் நேர்க்கோடாகச் செல்வனவென்பது தெளிவாகிறது. ஒளியானது நிமிஷம்-க இ-எ,கரு,ரு0000 மயில் போகிறது. சூரியனிடத்திலிருந்து பூமிக்கு எஉ-நிமிஷத்தில் வருகிறது. இந்தப் பூமிண்டத்தை ஒரு நிமிஷத்துக்குள், சஅ0-தரம் சுற்றிவருகிற வேகம் அதுக்கு இருக்கிறது. ஒளியானது ஒரு வஸ்துவின் மேல் விழுந்தால், அதில் சிலபங்கு திரும்பி வந்துவிடுகின்றது. சிலபங்கு வஸ்துவுக்குள்ளே செல்லுகிறது. சில பதார்த்தங்களில் உள்ளே சென்ற ஒளியானது மற்றொருபக்கத்தால் வெளிப்பட்டுப்போகும். சில பதார்த்தங்களில் உள்ளேயே அயிக்கியமாய்ப்போகும். வஸ்துவின் மேற்புறமானது பொன், வெள்ளி, முதலியவற்றைப் போல சிறுதும் மேடுபள்ளம் இல்லாமல் மழமழவென்றிருந்தால் அதன்மேல் விழுந்த ஒளியில் பெரும்பங்குத் திரும்பிப் போய்விடும். மற்றது வஸ்துவுக்குள்ளே அயிக்கியமாய்விடும். பொன்னையாவது, வெள்ளியையாவது மிகவும் மெல்லிசு தகடாக தட்டினால், உள்ளேபுகுந்த வெளிச்சம் மற்றொருபக்கத்தால் வெளிப்படும். கண்ணாடி, தண்ணீர், இவைகளைப்போன்ற வஸ்துக்களில் ஒருபக்கத்தில் வந்து விழுந்த வெளிச்சத்தில் பெரும்பாலும் மற்றொருபக்கத்தால் வெளிப்பட்டுப்போம், சிறிதுமாத்திரம் திரும்பும்.

சரித்திரம்.

இவ்வித வகுப்புகளினால் சிலகுடிகளுக்குஸ்வாதந்திரிய முண்டானதுபோல், இதர சிலகுடிகளுக்கு ஸ்வாஸ்திய ஸம்ரக்ஷணம்பலப்பட்டது. பலநூற்றாண்டுகளாய், குடிகள் பலத்தகனவான்களை ஸதா அடுத்துக்கொண்டிருந்து, அபாயம் வந்துற்றகாலத்தில் அவர்களுடைய கோட்டையிற் புகுந்து தங்களை ரக்ஷித்துக்கொண்டிருந்தார்கள். நாம்குறிக்குங் காலத்திலெனில், நாற்புறமும்மதில்சூழ்ந்த நகரங்களும், யுத்தப்பிற்சியில் தேர்ந்தகுடிகளும், அவர்களுக்குள் ஐகமத்தியத்துடன் ஒருவரை யொருவர் காக்கவேண்டுமென்னும் பிரதிக்கியையு மேற்பட்டு ஜனங்களுக்கு மிக அனுகூலமாயும் முன்னிலும் யதிகபலகட்டாயு மிருந்ததனால், இதுவரையில் அத்துவிதீய ஆஸ்ரயமாயிருந்த கனவான்கள் பிராபலியத்தில் குறைந்தனர்.

இப்படி யொருபக்கத்தில் கனவான்களுடைய மதிப்பும் வன்மையும் குறைய, மற்றொருபக்கத்தில் அரசனுக்கு இரண்டு விதத்திலும் ஆதிக்கிய முண்டாகிறது. இதுவரை பியூட்லி ராஜியத்தில் கிரமமான படைகளில்லாமைப்பற்றி, அரசன் யுத்தம்செய்ய சேனைகளுக்காவது, இராஜாங்கத் தொழிலை நடத்தப் பணத்துக்காவது, அதியகுயரான கிருபணகனவான்களையே எதிர்பார்க்கவேண்டியிருந்தது. இந்தவகுப்புகளைச்சேர்ந்த குடிகள் ஆயுதமெடுக்க அதிகாரமும் கியானமும் பெற்றவுடனே, சேனைக்குறைநீங்கிகனவான் களுதவியின்றி படைகளைச் சேகரிக்க அரசனுக்கு சத்தி யுண்டாயிற்று. குடிகளுடைய ஸ்வாதந்திரியத்துக்கும், கனவான்கள் கொடுமையின் நாசத்துக்குக் காரணமென்று குடிகளாலேயே மதிக்கப்பட்ட அரசனுக்குப் பட்டணங்கள் ஸ்வாதீனப்பட்டதனால், குடிகள் பலதடவைகளால் அவனுக்கு அர்த்தத்தைச்சேகரித்துத்தந்து அரசியலைப் பலப்படுத்தி, இரண்டாவது பணக்குறைவையும் ஒருவாறு நீக்கினர்.

குடிகளுக்கு ஸ்வாதீனம் வந்தபிறகு, முன்னிருந்த சோம்பல்நீங்கி, உழைப்பிலூக்கமும், வர்த்தகத்தில் அபிலாஷையும், விருத்தியு முண்டாகி சனசங்கியை யுயர்ந்து, வறுமையும் கொடுமையும் வெகுநாளாய்க் குடிகொண்டிருந்தப்பட்டணங்களில் செல்வமும்சொரிந்தது. செல்வம் சொரிய, டம்பமும் யோகமும் வழக்கப்படி தொடர்ந்து, சென்றது. இவை ஆதியில் நாசூக்கில்லாததாயும் முறட்டு மாதிரியாயு மிருந்தபோதிலும், நாளாதியில், சிரமப்பட்டு குடிகளின் சரிதையொழுங்காகி, கிரமமான அரசியலும் போலீசு மேற்பட்டன. ராஜியத்தில் சனசங்கமதிகப்பட்டு, அதிகமாக, சட்ட திட்டங்கள், அபிவிருத்தியாய், குடிகள் அவற்றைக் கிரமமாய் அனுசரித்தும், அவற்றை யுல்லங்கனம்பண்ணுபவர்களைத் தண்டித்தாலன்றி, பொது க்ஷேமத்துக் கனுகூலமா யிராதென்று கண்டார்கள். முதல் முதல்ப் பட்டணத்திலு

ண்டான விதிகளும், சீரொழுக்கமும் தினே தினே நாற்புறத்திலும் பரவி, இதர விடங்களிலும் சேர்ந்தன.

வரதவேங்கட சம்வாதம்.

ம-ா-ா. தத்துவபோதினி கர்த்தரவர்களுக்கு,

என்னுடன்பிரப்புகளே.

சிலநாள்களுக்குமுன் இரண்டுபண்டிதர்களுக்கு வெகு விநோதமான சர்ச்சை நடந்ததைக்கண்டு நான் உண்மையானஆனந்தத்தை யடைந்தபடியால், அந்த சம்வாதத்தை நம்மவரனைவரும் கேட்டுக் களிக்கவேண்டுமென்கிற கருத்துடன், அதைக் கூடியவரையில் இக்கடிதத்தில் குறித்து உங்களிடம் அனுப்பியிருக்கிறேன். நீங்கள் தயைசெய்து அதை உங்கள் தத்துவபோதினியில் பிரசுரம் செய்வீர்களாகில், நானுங்கள்விஷயத்தில் என்றென்றும் பாத்தியப்பட்டிருப்பேன். அவ்வரலாறென்னவெனில்,

உபதேசத்தால் உலகத்தாருக்கு ஞானக்கண்க ளளித்து மோக்ஷவழியைத் திறக்கவும், கோயில், திருமலை, பெருமாள் கோயிலென்று வைஷ்ணவர்களால் சிறப்பித்துச் சொல்லப்பட்ட மூன்று திவ்ய தேசங்களில் ஒன்றாகிய திருப்பதியின்மகிமையைக் காக்கவுமே, அவதரித்தாற்போன்ற **லோகாசாரிய ரென்னும்** ஒருவர்சிஷ்யசஞ்சாரம்போகும்போது மார்க்கத்தில் மற்றொரு வைஷ்ணவனைக்கண்டு நீர் யாரென்றுகேட்க, அவர் தாம் உலகத்தையாளும்அஞ்ஞானஇருளைப்போக்கஹயக்கிரீவனை உபாசித்து, அவருடைய வரப்பிரசாதத்தால்**பண்டிதசார்வபவும**னென்கிற பெயரைப்பெற்று கஞ்சியில்வரதனுடைய சேவையின் ஆநந்த சமுத்திரத்தில் மூழ்கியிருப்பவரென்று விடையுரைத்தார். இவ்விருவருடைய உத்தேசியமும், ஞானமும், குலமும், ஒத்திருந்தமையால் அவர்களுக்கு நாள்தோறும் நேசம் விருத்தியாகி பலநாள் பிரியாமல் ஒன்றாய் யாத்திரை செய்து வந்தார்கள். இப்படி யிருக்கையில் ஒருநாள் கஞ்சிக்குச் சமீபமாய்ப் போகும்போது பண்டித சார்வபௌமன் லோகாசாரியரை நோக்கி ஐயா, வரதனைச் சேவிக்க வேண்டாமாவென்று கேட்க, அவர் என்வேங்கடனைக்கண்ட கண்ணால் மற்றொன்றைக் காண்பேனோ வென்றார். இதினால் ஒருவர்க்கொருவர் மனஸ்தாபமுண்டாகி அடியில் வரும் சம்வாதம் நடந்தது.

பண்டித சார்வபௌமன்.—அனைத்துலகும், அனைத்துயிரும்படைத்தச் சதுர்முகப்பிரமனே காணத் தவம்செய்த என் வரதனைககாட்டிலும், சாதாரண மனிதருடைய ஆசாரவிலக்ஷணமுமற்றஉமது பைராகி வேங்கடன் சிரேஷ்டமென்றுசொல்ல உமக்கு மனந்துணிந்ததா, நாவெழும்பித்தா?

லோகாசாரியர்.—பிரமன் தவம் செய்த கதை உங்களூரார் எழுதிய புராணத்திலிருக்கின்றதோ. அதுண்மையே என்றாலும், ஆதியிலிருந்ததாய்ச் சொல்லும் அத்திக்கட்டையைச் செல்லரித்து எத்தனைகாலமாயிற்று. நேற்று செய்வித்ததாகிய இப்போதிய விக்கிரகந்தான் ஆதிவிக்கிரகமென்று சொல்ல நீர் துணிவீரோ. எந்தபுராணத்தை யெடுத்தாலும் "சலளவேங்கடநாயகஃ" என்று முறையிடுவது எங்கள் வேங்கடனையா, உங்கள்வரதனையா, சொல்லும்.

பண்டித.—புராணங்களில் சொல்லும் வேங்கடன் உங்கள் தாசிரி விக்கிரகந்தானோ? வெகுபுதுமை! நேற்றுவரையில் சுப்பிரமணியனாயிருந்ததற்கு நாமத்தைச்சாற்றினால் அது வேங்கடனாகிவிடுமா. பாதிரிகள் தமிழனைக் கிரிஸ்துவராக்குவது இப்படிதானோ? உங்கள் ஆதிவிக்கிரகத்தை எலி தின்றுவிட்டதோ, பருந்து தூக்கிக்கொண்டுபோய்விட்டதோ உமக்குத் தெரியாதே. ஆழ்வாராதிகளெல்லாம் கண்டு, சௌந்தரியத்தில் ஈடுபட்டு, பாட நாவெழும்பாது, உண்மையாகி, தயங்கிநின்ற திவியமங்கள விக்கிரக மாகிய என் வரதனுக்கும் மற்றொன்று ஒப்பாமோ?

லோகா.—எங்கள் வேங்கடனைமாத்திரமேயன்றி எங்களூரிலுள்ள மலை, கல், குளம்முதலியவற்றையும், உங்களூரி

னுள்ள காளைக்கட்டு பொம்மைகளையும்
பாடிய ஆழ்வார்கள், அக்காலத்தில் உங்க
ள் விக்கிரகமிருந்தது உண்மையானால் அ
தைப் பாடாமல் போவார்களோ. நேற்று
வார்ப்பித்து முகத்தில் துளைகள் துளைத்
து வைப்பதினாலேயே விக்கிரகம் பழசா
கிவிடுமா. உங்களூர் புராணமெழுதினவர்
களும் வெகு சமர்த்தாள்தான். பரஸ்திரீ
களைக் கண்டால் லஜ்ஜைப்படுவது சாதா
ரண மனிதர்களுக்கே தர்மமாயிருக்க உ
ன்வரதன் வேகவதிவரும் வழியில் நிர்வா
ணமாய்ப் படுத்தானென்று சொல்ல உ
னக்கு வெட்கமில்லையலலவா ?

பண்டித.—தன்கோணல் தனக்கு
த்தெரியாதென்பது உண்மையே. உன்
வேங்கடன் துருக்கச்சியை இழுத்துவந்
து, வைப்பாட்டியாய் வைத்திருப்பதை
நீ மறந்தாயல்லவா. ராமானுஜபாஷியகா
ரர் உன் வேங்கடன் தோள்களில் சூடா
விட்டால், அவனைச்சாதியில் சேர்ப்பார்க
ளா. உன் வேங்கடன் வாழ்வெல்லாம் அ
ந்த பாஷியகாரர் காலத்துக்குப் பிறக
ல்லவா. உங்கள் வேங்கடனுடைய ஆசரி
யனுக்கு ஆசரியர்களெல்லாம், என் வரத
னுடைய வரசக்காப்பானாகிய ஆளழகிய
சிங்கர் தவை கிடைத்தால் போதுமென்
று அவளைப்பாடி, வாழ்த்தித், தொழுதா
ர்களே. உன் வேங்கடன் எனக்கெவ்வ
ளவு.

லோகா.—ஒண்டவந்தபிடாரி ஊர்ப்
பிடாரியைத் துறத்தியதென்கிறபடி நீவி
ட்டிக்கள்ளனைப்போல் ஸ்தலப்பெருமா
ளைக் கும்பத்திலாவாகனம்செய்து தான்
மேட்டின்மேல் ஏறி யுட்காருவதினால் உ
ன்வரதனுக்கு ஒரு மகிமையுண்டோ. ஸ்ரீ
நிவாஸன், கருணாநிதி, என்கிற பெயர்கள்
என் வேங்கடனன்றி வேறொன்றுக்குத்
தருமோ. இந்த உலகத்தாருக்கெல்லாம்,
இவ்விடத்திலுள்ள குறைகளெல்லாம் தீ
ர்ப்பதுமன்றி, அவர்கருணையாகிய திவ்வி
ய தீர்த்தங்களால் அவர்களுடைய பாவ
ங்களைப்போக்கி, மேல்வீடும் தருகின்றார
ல்லவா. உன்வரதன் யாருக்கென்னவரங்
கொடுத்தான். உன்பவிஷுக்கு வாயொன்
று சேடா.

பண்டிதர்.—அடமூட்டாளே! கு
ருடனாகிய நீதானா நல்வழிகாட்டுவோன்.
உன் வேங்கடத்திலுள்ள தீர்த்தங்கள்மா
த்திரமேயன்றி, இவ்வுலகத்திலுள்ள தீர்
த்தங்களனைத்தும்கூடி வந்துதித்த சர்வ
தீர்த்தகுளம் எங்கட்கு கால்கழுவுநீரும்,
திருவநந்தசீரசு ஸ்நான தீர்த்தமுமானா
ல், எங்கள் தீர்த்தத்தின் மகிமையை
ச் சொல்லவேண்டுமோ. "நாசேதிமாத்
திர வைகுண்டயாத்திர" என்கிற தெ
லுங்கு பழமொழிப்படிக்கு, உங்களூரை
மெதித்தவன் திரும்புவதில்லை யென்ப
துண்மையே. உன்தெய்வத்தினுடையக
ருணையின் பயனெல்லாங்கூடி, ஆபத்தும்
அகாலமரணமுமானால், அப்படிப்பட்ட
வரம் எங்கள்வரதன் கொடுக்கவில்லை. தா
ன் ஒன்றான பிரும்மாவுக்கே நித்தியவரம்
கொடுத்தானென்றால் மற்றதைச்சொல்ல
வேண்டுமோ. உன்தெய்வத்தின் இச்சை
யெல்லாம் எவ்வளவு இழிவானவையா
யிருக்கின்றனபார். உலகத்தில் பொன்னு
க்கும் பொருளுக்கும் ஆசைப்படுவோ
ருண்டு. மயிருக்கும் ஆசைப்படும் பயி
த்தியக்காரருமுண்டோ. கடைசீயாக ஸ்ரீ
நிவாசனென்பதற்குபதில் ஸ்திரீநிவாச
னென்றால் கூத்திக்கள்ளனாகிய உங்கள்
தெய்வத்துக்கு இசைந்திருக்கும்.

லோகா. — அடா ஜடமே.
தெய்வத்துக்குப் பொன்னாலும் பொரு
ளாலும், மயிராலும், ஆகவேண்டியகாரி
யமென்ன? உலகத்தில் சத்தியத்தையும்
தன் ஆக்கியையையும் காக்கும்பொருட்
டு, மனிதர் விரும்பியப்பிரார்த்தனைக் கா
ணிக்கையைச் சரிபாய் செலுத்திவைத்
துக்கொள்ளுகிறாரேதவிர வேறில்லை. வே
ங்கடனுடைய ஆக்கியா சக்கிரத்தின் ம
ஹிமையைத்தான் யோசித்தாயா. உலக
த்தில் அவர்விஷயத்தில் ஒருவர்பொய்
சொல்லி பிழைப்பாரா. அவருடைய இ
ச்சையன்றியே வருஷத்தில் லக்ஷம் ல
க்ஷமாய் பக்தாள் சொறிகின்றார்களே.
உன்வரதன் கிண்ணிப்பிச்சையெடுத்தா
லும் இரண்டுரூபாய் அகப்படுமா? எங்
களூருக்கு வருவோரில் வருஷத்தில் நா
லுபேர் ஜுவத்தாலிறந்தால் ஒருவைசாசி

த்திருநாளில் நாலாயிரம்பேர் வாந்திபே
தியில் மாளவில்லையா ? என் வேங்கடன்
துருக்கச்சியாகிலும் சம்சாரியை மணஞ்
செய்தார். உன்வரதனேவென்றால் உல
கத்துக்கெல்லாந்தெரிந்த வியபசாரியாகி
ய மலையாள ஸ்திரீயை சேர்த்துக்கொ
ண்டதை மறந்துவிட்டாயா.

பண்டித.—அடாமூடா ! உன்தெய்
வத்தின் ஆக்கியா சக்கிரத்தை நான் வெ
குநாளாயறிவேன். கோயில் துறையாரு
ம் துரைத்தனத்தாரும், அதின் தலையை
த்தடவி, குல்லாய்போட்டுக் கொள்ளை ய
டித்தால், பல்லையிளித்துப்பார்த்திருக்கின்
றதல்லவா. பைத்தியக்காரர் பணத்தைக்
குவிப்பதினால் அதற்கொரு மகிமையோ.
லாயரிடத்தில் வியாஜியக்காரர் ஏமாந்து
கொட்டும் பணத்தைக் காட்டிலும் அதிக
ம் உன்தெய்வத்துக்கு வருமோ. இதில்
லாமையால் என் வரதன் சிறப்பு குறை
யுமோ. பசுவைகொன்று செருப்பு தா
னம்செய்வதில் ஒரு மேன்மையுண்டோ.
ஒருபக்கத்தில் கொள்ளையிட்டு மற்றொரு
பக்கத்தில் பறிகொடுப்பதில் என்ன பெ
ருமை. பொய், புளுகு, கொள்ளை, மோ
சம் முதலிய குற்றங்களுக்கெல்லாம் பிற
ப்பிடம் உன்தெய்வத்தின் கோயிலாயிரு
க்க, அதையெல்லாம் பார்த்து வாலாட்ட
மாட்டாமல் விழித்திருக்கும் உன்தெய்வ
த்தின் மகிமையை நீதான் கொண்டாட
வேண்டும். பயப்படுவோனை யவன் ம
னம் வருத்துகிறதேயன்றி உன்தெய்வம
ல்லவே ; அதைக் கல்லாயும் செம்பாயும்
நினைத்திருக்கும் என்னை அது என்னசெ
ய்யும். மருண்டவன் கண்ணுக் கிரு
ண்டதெல்லாம் பயமென்பதுபோல் அக்
கியானியாகிய உனக்கு இது தெய்வமா
ய்த் தோன்றுகிறது. நீதானா உன்சிஷர்
களுக்கெல்லாம் வழிகாட்டுவோன்.

லோகா. — ஊரு மில்லாப்
பேருமில்லாத உன் தெய்வத்தை யுயர்த்
தி உலகமெல்லாம் அரசாளுகிற என்தெ
ய்வத்தை அகௌரவமாயும் அவமானமா
யும் பேசத் துணிந்தாயல்லவா ? உனக்
குத் தகுந்த புத்திசெய்விக்க வெகுநேர
ஞ்செல்லாது. உன் தெய்வத்தின்மேல்
இதோ மானநஷ்டத்துக்கு வியாஜியமா
டி உன்தெய்வத்தின் குடிசையைப் பிடி
ங்கி யேலம்போட்டு, உன் தெய்வத்தையு
ம் ஜயிலில்வைக்காமல் போவேனாகில் நா
னும் மனிதனல்ல, என் வேங்கடனும்
தெய்வமல்ல.

என்றும் இன்னம் பலவாறும் இவ்வி
ருவரும் பேசித் திட்டிக்கொண்டு, குடு
மியும் தாடியும் பிடித்துக்கொண்டு, த
றையில் விழுந்து கீழும்மேலுமாய் புற
ண்டு அடித்து உதைத்துக்கொண்டிருக்
கையில், ஒரு அனியமதஸ்தன் அவ்விட
ம் வந்து இச்சண்டைக்குக் காரணமென்
னவென்றுகேட்க, அவர்களிருவரும் ஒரு
மித்து அவனை மத்தியஸ்தனாய் வைத்துக்
கொண்டு, ஆதியோடந்தமாய் நடந்ததெ
ல்லாம் சரியாகச் சொன்னார்கள். அவன்
அதையெல்லாம் வெகுபொறுமையுடன்
கேட்டு, கடையில் நகைத்து, அவ்விருவ
ரையும் நோக்கி, “ நீங்களிருவர் உபாசித்
“ ததும் செம்பும் கல்லுமேயன்றி தெய்
“ வமல்ல. தெய்வத்தின் ஞாபகத்தை
“ யுண்டாக்கக் குறிப்பாகமாத்திரம் விக்
“ கிரகம் வந்ததேயன்றி விக்கிர கத்தை
“ யே தெய்வமென்று கொள்வது பிசகா
“ ம். தத்துவத்தை யோசிப்பீராகில் “வே
“ ங்கடனும் வரதனும் ஒன்றே வேறென்
“ பார்கெடுவதும் நன்றே” என்றுசொல்ல
க்கேட்ட அவ்விருவரும் ஒருமித்து வெ
கு கோபமடைந்து இந்த அஞ்ஞானி பி
ழைத்திருந்தால் நமது மதம் பிழைக்கா
தென்று நினைத்து அவனை யடிக்க யத்த
னித்ததைக்கண்டு அவன் அவர்களைநோ
க்கி, ஐயா உங்களை விலக்கவந்தால் நான்
அடிபடுவது நியாயந்தான். நீங்கள் தலை
யை யுடைத்துக்கொண்டாலும் இனி நா
ன் வருவதில்லையென்று போய்விட்டான்.

விவேகவிளக்கம்.

“இம்முறை நாம் வெகு அச்சத்தோடு
வெளிப்படுகிறோம். சென்ற இரண்டுமாத
மாய் மறைந்திருந்தது நம்மிடித்தில் ஒரு
பெருங்குற்றம். இத்தவறினால் நம்மையனே
கர் பொய்யரென்று நிச்சயஞ்செய்திருக்க
லாம். இந்துக்கள் தொடக்கத்தில் ஆரவார
ஞ்செய்து எண்ணியதை முடியாமல் சிலகா

லத்துக் குள்ளேயே, அதனிடத்தி லிருக்கிற ஊற்றம் நீங்கி, அதைக் கைவிடுவார்களென்பதற்கு நம்மையும் ஒரு திருஷ்டாந்தமாகக் கொண்டிருக்கலாம். எவர் எதைச்சொன்னாலும் பொறுத்துக் கொள்வது நம்முடைய கடமையாயிருக்கிறது. முன்னே யறியக்கூடாமல் தெய்வகதியினால் நேரிட்ட இடையூறுகளினாலேயே, இதைப் பிரசுரஞ்செய்வது கூடாமையாய்ப் போய்விட்ட தென்பது மாத்திரம் உண்மை; அதனால் நம்மை யுலகத்தார் தயைகூர்ந்து மன்னிப்பார்க ளென்று நம்புகிறோம்.

இனி, நாம் மார்சுமாதத்துப் பத்திரிகையில் சொல்லியபடி பெண்கள் இயற்கையிலேயே தீக்குணமுடைய வர்களா வென்பதை இம்முறை விசாரிக்கவேண்டியது. ஆயினும் முன்னதாய் மற்றொரு விஷயத்தைக் குறித்துச் சிறிது பேசவேண்டியிருப்பதால் இதை மற்றொரு மாதம்வரைக்கும் நிறுத்தி வைக்கிறோம்.

ஏறக்குறைய இரண்டு மூன்று மாதங்களுக்கு முன் வேதசமாஜ கண்டனம் என்று ஒரு புத்தகம் வெளிப்பட்டதை யெல்லோரும் அறிந்திருக்கலாம். இதன் குணாகுணங்களைக்குறித்துச் சிறிது சொல்லும்படி யோசித்திருந்தோம்; இப்போது அது பழைமைபட்டுப்போனதாலும், அனேகர் இப்புத்தகமொன்றிருந்த தென்பதையே மறந்திருக்கலாமாதலாலும், விரிவாய்ச் சொல்வதில் பயனில்லை. மேலும் அது வேதசமாஜத்தாருக்கு எதிரான நூலாதலால், அதை யெடுத்துப் பேசவேண்டியவர் அவரேயன்றி நாமல்ல. இவர் வேதசமாஜத்தா ரிடத்தில் குற்றமாகக் காட்டியவை குற்றமல்ல வென்றும், அவர்களிடத்தில் இருப்ப தெல்லாம் குணமென்றும் நாம் அவர்கள் பக்கமாய் யாதொன்றும் சொல்லவில்லை; பொதுவாக, மற்றொரு நூலைக்கண்டிக்கும் நூலினிடத்தில் என்னென்ன குணங்க ளிருக்கவேண்டுமோ அவைகள் இக்கண்டனத்தில் இருக்கின்றனவா வென்பதைமாத்திரம் விசாரிப்போம்.

க-வது.— ஒரு சித்தாந்தத்தையாவது, ஒரு நூலையாவது கண்டிக்கப் புகுகிறவர்கள் அவைகளையாவது, அவற்றை யேற்படுத்தினவரையாவது எவ்வளவும் இகழ்ந்தாவது திட்டியாவது பேசக்கூடாது. திட்டுவது பெரும்பாலும் உத்தரவுசொல்ல வகையில்லாதவருடையகாரியம். இக்காலத்திய ஸ்கூல்களில் படித்தபிள்ளைகள் முற்காலத்துப் படிப்பிலும் சிறப்படைந்திராத தம்முடைய தந்தைகளைப்பார்த்துப் பூமியைத் தட்டையென்று சொல்லுதல் அனுபவத்திற்கு ஒத்திருக்க வில்லையென்று வாதித்தால் அதற்கு அவர்கள் உத்தரவு சொல்ல வகையற்று பிள்ளைகள் நீசவித்தையை வயிற்றுப்பாட்டுக்கு வேண்டிய வரைக்கும் படித்துக் கொள்ளாமல் அதை வைத்துக்கொடு வீண் ஆட்சேபங்கள் செய்து வியாசர் பராசரர் முதலியவர்களைத் தூஷிக்கிறார்களென்றும், குலத்தைக்கெடுக்கக் கோடாலியாய்ப் பிறந்தார்களென்றும், திட்டுவதை அநேகர் அனுபவத்திற் கண்டிருக்கலாம். பிள்ளைகள் கொண்ட கருத்துத் தவறென்று காட்டும்படியாய் வல்லமைத் தம்மிடத்திலிருந்தால், அப்படிவெறுத்துக்கொள்ள மாட்டார்களல்லவா? அப்படியே நூல் முதலியவற்றைக் கண்டிப்போரும் அதை யுக்தியினால் கண்டிக்கத்தக்க வல்லமை யிருந்தால் திட்டவேண்டிய அவசியமில்லை. திட்டுதல், எதிரிகளிடத்தில் திட்டுவோர்க்கிருக்கிற பகையைத் தெரிவிக்குமேயன்றி, அவர்களுடைய கொள்கை தப்பென்று எவ்வளவுங் காட்டமாட்டாது. இதை மேற்சொல்லிய கண்டகர் மனதிற்கொள்ளவில்லைபோலே யிருக்கிறது. "புன்மதி" "இவர்களுக்கு நாணமில்லையா?" "கேடுவருமுன்னே மதிகெட்டுவரும்" என்றும், "அகோரஸமாஜம்" என்றும், "வேதசமாதி" யென்றும், "அதத்துவபோதினி" என்றும், அங்கங்கே சொல்லிக்கொண்டு வருவதைப் பார்க்கும்போது, அவர்மேல் மீளாப்பகைகொண்டு அது காரணமாயுண்டாகிய வொரு ஆவேசத்தோடே பேசுவதுபோலே தேற்றுகிறதேயன்றி, அவர்களுடைய பொய்யையழித்து மெய்யை நிலைநிறுத்தவேண்டுமென்று மெய்யனிடத்தில் அன்பைவைத்துப் பேசுவதுபோலக் காணவில்லை.

இதுவுமன்றி எவ்வகைப்பட்டவன் செய்த நூலிலும் சிறிதேனும் குணமிருக்குமேயன்றி அடி தொடங்கி நுனிவரையில் அவன் சொல்லியது ஒவ்வொன்றும் குற்றமாகவேயிருக்கமாட்டாது. இதை உலகஅனுபவத்தாலே அறியலாம். அப்படியிருக்க, வேதசமாஜத்தாருடைய நிபந்தனைகள் எல்லாவற்றின் மேலும் ஒருங்கக் குற்றஞ்சொல்வது தகுதியன்று. முக்கியமாக, அவர்கள் சதிர்முதலிய கச்சேரிகளுக்குப் போகக் கூடாதென்றதின்மேலும் குற்றம் சொல்லியதைக்குறித்து மிகவும் துன்பப்படுகிறோம். இந்த நிபந்தனையைக் குறித்து அவர்கள்மீது நாம் சந்தோஷப் படவேண்டியதேயன்றி, அதைக் குற்றமாகத் தூற்றக்கூடாது. சதிருக்குப் போவது உலகவழக்கத்திலிருந்தாலும், உலகத்தோர் அதை நன்மையென்று கொண்டார்கள். கச்சேரிவைக்கிறவர்களையே கேட்டாலும் தாம்செய்வது சிறந்த காரியமென்று சொல்லமாட்டார்கள். சிறப்பில்லாமல், இ

கழத்தக்கதை யவர்கள் செய்துகொண்டு வ
ருவானேனெனில் அப்படிவருவது உலக வி
யற்கை. மனிதர்க்குள் ஒவ்வொருவ னுக்கு
ம் ஒரு தொழிலைத்தானே கெட்டதென்று
இகழ்ந்து கொண்டே அதைச் செய்துகொ
ண்டு வருகிற தன்மையுண்டு. ஊன்தின்பவ
னைப்பார்த்து அது உயிர்க் கொலையின் கார
ணகாரியங்களாக விருப்பதால் அது பாவம
ல்லவோ வென்றால் பாவமென்றே யொத்
துக்கொள்ளுவான். ஆயினும் அதை விட்டு
விடுதல் அவனுக்கு முடியாதகாரியம். மூ
க்குத்தூள் போடுகிற வழக்கமும் அப்படி
யே. இப்படி ஒவ்வொரு மனிதனிடத்தி லி
ருப்பதுபோல ஒரு தேசத்து ஜனங்களிலும்
அனேக வழக்கங்களிருக்கின்றன. ஆகையா
ல் அவ்வழக்கங்களுக்காகத் தேசத்தாரை யி
கழாமற்போனாலும் அவைகளை மனத்துணி
வோடு நீக்குபவரைப் புகழவேண்டியது. எ
ப்படி மூக்குத்தூள் போடுகிறவரை யிகழா
மற்போனாலும் அவ்வழக்கத்தினின்று நீங்கு
பவரைப்புகழவேண்டுமோ, ஊன்தின்பவனை
யிகழாமற் போனாலும் தின்னுதலையொழிப்
பவனைப் புகழவேண்டுமோ, அப்படியே ச
திர்வைப்பவரை யிகழாமற் போனபோதிலு
ம் மறுப்பவரைப் புகழவேண்டியது. இப்ப
டியிருக்க, அதைக்கூட வேதசமாஜத்தாரிட
த்தில் குற்றம்போலக் காட்டியது முன்சொ
ல்லியதுபோல் அவர்கள்வாயினால் சொல்வ
தும், கையினாலெழுதுவதும் எல்லாம் குற்
றமேயன்றி குணமே கிடையாதென்று நிலை
நிறுத்த வேண்டுமென்கிற பட்சபாதமாகிய
கருத்தோடே, பேசியதாக நினைக்கவேண்டி
யிருக்கிறதேயன்றி, "குணநாடிக் குற்றமு
நாடி" என்பதைச் சிறிதேனும் கவனித்ததா
கக்காணோம். மேலும் கிழக்கதைகளை யிடை
யிடையே கொண்டுவருதல் நியாயமன்று.
கட்சிகளைக் கண்டிப்பன யுக்திளேயன்றி மூ
க்கறையன் கதையினாலும் ருத்திராட்சப்பூ
னை கதையினாலும் யாதொன்றும் முடியமா
ட்டாது. தான் சொல்லுகிற விஷயம் எதிரி
லிருப்பவர்க்குத் தெரியாவிட்டால், அப்போ
துமாத்திரம் திருஷ்டாந்தங்களைக் கொண்
டும், கதைகளைக்கொண்டும் அதைத் தெரிவி
க்கவேண்டியதே யன்றி, ஒருவருடைய கட்
சியை யெடுத்துப் பேசும்போது வேடிக்கை
க்கதைகளை யெவ்வளவும் உபயோகப் படுத்
தக்கூடாது. எதிரியினுடைய கட்சியை யுக்
தியால் கண்டித்தபின்பு, இப்படிப்பட்ட க
தைகளையுஞ் சொல்லினாலும் ஒருபங்குக்கு
ஒத்துக்கொள்ளலாம். அப்படியன்றி யுக்தி
க்குப் பிரதியாக கதையைச் சொல்லுவதி
னால், எதிரியைத் திட்டுவதில் தன்னுடைய
கட்சிக்கு எவ்வளவு உறுதி யுண்டாகுமோ
அவ்வளவு உறுதிதான் உண்டாகும். இப்ப
டிப்பட்ட கதைகள் இந்தக் கண்டனத்தில்,
முக்கால்பங்கை விழுங்கிவிட்டிருக்கின்றன.
இப்படி அந்தப் புஸ்தகத்தின் சைலியைப்
பார்க்கும்போது, வேதசமாஜத்தாரைத் தி
ட்டி யிகழ்வதற்காக எழுதினது போலவே
தோன்றுகிறதேயன்றி, தனக்கே தீங்குசெ
ய்த இராவணனிடத்தில் சீதை அன்புவைத்
து அவனுக்கு இரங்கி இதஞ்சொல்லி, தன்
னால் கூடியவரையில் அவனைச் செம்மைப்
படுத்த முயன்றதுபோல வேதசாமாஜத்தா
ரையும் அவருடைய கொள்கையை நம்புகி
றவர்களையும், அறியாமையி னின்றும் நீக்கி
உண்மையைச் சேர்ப்பிக்க வேண்டுமென்கி
ற விருப்பத்தோடே யெழுதினதாகத் தோ
ற்றவில்லை. இனி அவர்களுடைய நிபந்தனை
களுள் ஒன்றாகிய பெண்களைப் படிப்பித்தலை
க்குறித்து, மேற்படி கண்டகர் சொல்லியது
அக்கொள்கையையுடைய நம்மையுஞ் சார்ந்
ததாதலால், அதற்கு நாம் மறுமொழி சொ
ல்லுதல் தகுதியென்று தோன்று கிறது;
ஆனால் இதை மற்றொருபதிப்பில் தெரிவிக்கி
றோம்.

இதுவுமல்லாமல் தம்முடைய கொள்கை
க்கு உறுதிப்பாடாக அக்கருத்தே கொண்ட
வேதவாக்கியங்களிருக் கிறதாகச் சொல்லி
யிருக்கிறார். சிலவிடங்களில் அனுவாகங்க
ளையும் ஒரேவிடத்தில் தனித்தவாக்கியத்தை
யும் குறிப்பதுமன்றிச், சிலவிடங்களில் பொ
துவாக வேதம் முறையிடுகிறதென்றும்சொ
ல்லியிருக்கிறது. அந்தந்தவாக்கியங்களையெ
டுத்துக் காட்டாமல் வாக்கியங்களிருக்கின்
றனவென்றுமாத்திரஞ் சொல்லிவிடுவது, த
ம்முடைய கட்சிக்கு உறுதியன்று. வேதவா
க்கியங்களை யப்படியே யெழுதவேண்டுமெ
ன்றபடியல்ல. அவற்றைத்தமிழில் மொழி
பெயர்த்து எழுதவேண்டியது. படிப்போர்
விரும்புவது கருத்தேயாகையால், தமிழில
க்கருத்தை யெழுதினால் இவர் சொல்லியத
ற்கும் அவ்வாக்கியத்தின் கருத்திற்கும்பொ
ருந்தியிருத்தலும், இராமையும் செம்மையா
ய்விளங்கும். ஆயினும் இதை முன்சொல்லி
யகுற்றங்களுக்குச் சமமானதாகக்கொள்ள
க்கூடாது.

இன்னும் ஒரு விஷயத்தைச் சொல்லி
இதை முடித்துவிடுகிறோம்,

வேதசமாஜததாருடைய ஆறுவதுநிபந்த
னைக்குத்தாம் சொல்லிய உத்தரத்தில் "ஒரு
வன் பிறப்பு எந்தச்சமயத்திலோ அச்சமய
முறமை வழுவாமல், அச்சிஷ்டாசாரத்துட
ன் அந்தச் சமயதேவதையைப் பூசித்துத்
தொழுவானேயாகில் அவனுக்குச் சித்தமாய்
மோக்ஷங்கிடைக்குமென்றும், அம்முறைத

ப்பிவேறுவிதத்திற் போவானேயாகில்,அவனைத்தெய்வங் கைவிடுவதும்தவிர கொடிய பாவத்திற்கொத்த பெருநரகமும் கிடைக்குமென்றும் நமது எஜுர்வேதத்திற் சொல்லுகிறதே” என்று சொல்லியிருக்கிருர். இப்படியெல்லாமதத்திலும் மோட்சமுண்டென்று சொல்வது முன்னோர் கருத்துக்கிசைந்ததாகத் தோற்றவில்லை.

“ ஆயிரமால்களைப்பிழிந்து மாங்கனிபோர் கோதுவீசினும்”
“ மூலகாரணனெனச் சிலர்மொழிந்திடும் மாலும்”
“ மாயுமாயர்தந்தசங்கு கோடிகோடிமருகவே”
“ பிரமன்மாலறியாப் பெற்றியோனே”
“ ஆலாலமுண்டிலனேல் அன்றயன்மாலுள்
“ ளிட்ட மேலாய் தேவரெல்லாம் வீடுவர் காண்”
“ நிலமுகற் கிழண்டமுற நின்றிலனேல் இருவரும் தம்சலமுகத்தால் ஆங்காரம் தவிரார்காண்”
“ எங்கொங்கை நின்னன்ப ரல்லார்தோள் சேரற்க எங்கநினைக்கல்லா தெப் பணியும்செய்யற்க் கங்குல்பகலெங்கண் மற்றொன்றும் காணர்க”

என்றிப்படிசைவருட்சிறந்தவரும்;

“ சிலையினலிலங்கை செற்றதேவனே தேவனுவான்”
“ பெண்ணுலாஞ் சடையினனும் பிரமனுமுன்னைக்காண்பான் எண்ணிலாவூழியூழி தவஞ்செய்வார் வெளிகிநிற்ப”
“ அணியரங்கனென்ன முதினைக்கண்டகண்கள் மற்றொன்றினைக் காணவே”
“ சடைமுடியன் சதுர்முகனென்றிவர்முதலாந் தரமெல்லாம் அடைய வினைப்பயனாகி யழிந்துவிடும்படிகண்டு”

இந்திரனும் ஏறுயர்த்த வீசன்தானும் ஈரிரண்டு முகத்தானும் இல்லாவந்நாள் என்று வைஷ்ணவருட் சிறந்தவரும்சொல்லியிருக்க, மதங்களெல்லாவற்றிலும் மோட்சமுண்டென்று தாம்சொல்லியது, தாமே, முக்கிய மதங்களாகக் காட்டியசைவ வைஷ்ணவங்களுடைய ஏற்பாட்டிற்குப் பிரத்தியட்சவிரோதமாயிருக்கிறது.

மேலும் இவர்சொல்லியபடி அவ்வர்த்த முழுமையும் தருகிறவேதவாக்கியமிருக்கிறதாகத் தோற்றவில்லை. அதில் ஒருபங்குக்கு மாத்திரம் ஒருவாறு அர்த்தமாகும்படியானதுஇருக்கிறது. தன்னுடையதேவதையைக்கைவிட்டால் இரண்டு தேவதையினலும் கைவிடப்பட்டு, பாவத்தையும்அடைகிருன், என்று பொருள்படுகிறதாக வொருவேதவாக்கியமிருக்கிறது. அந்தவாக்கியத்தை இங்கே யெழுதவில்லை ; ஆயினும் அதன்பொருளையே யடக்கி முன் வித்வான்களிலொருவர் சுலோகமாகச் சொல்லியிருப்பதை யெழுதுகிறோம்.

“ஸ்வீயஜேத நிஜாம்யஜி ஜெவதாம்
உஹயதஃஸ்ரூவதெ ஜுஷதெவ்யூவஃ”

“(ஒருவன்)தன்னதாகியதெய்வத்தைமீறுவானாயின் இரண்டுபக்கங்களிலும் விடப்படுகிருன் பாவத்தையும் அடைகிருன்” என்பது இதன்பொருள். ஆகையினல் கண்டகர்குறித்த வேதவாக்கியத்தை முன்வித்வான்களும் அறிந்திருக்கிருர்களென்பது சித்தமாகிறது. இதைக்கொண்டு எல்லாமதத்தை யனுசரிப்பவர்களுக்கும் மோட்ச முண்டென்று பொருள் கொண்டதுமாத்திரம் இவருடைய சொந்தமாகத் தோன்றுகிறது. எப்படியெனில் மேல்காட்டிய சுலோகத்தை யெழுதின வித்துவானே மற்றொருநூலில் “ இவர்களுக்குவரங்கொடுத்து வாழ்விக்கவல்லவருய், ஸவஜெயஜூத்தாலே தேவதேவனென்று பேர்பெற்றுத், திரிபுரமெரிக்குஞ் சேவகமுடையனுன வியட்டி சங்கராதிகாரிக்கு, விருகாந்தகாதி விருத்தாந்தங்களில் பிறந்த விசேஷங்களைக் கேட்டால் உருத்திரபதத்திலும் ருசிபிறவாது” என்று சொல்லியிருக்கிருர். ஆகையினலே இவர்காட்டிய வாக்கியமானது, நாம் காட்டினதாகவேயிருந்தால் அதற்கு இவர்கொண்ட பொருள் முன்னோர்கள் கொண்டதன்றென்று தெளிவாகிறது.

முடிவில் இதைப்படிப்பவர் நாம் ஏதோவொருமதங்களைச்சார்ந்த பட்சபாதத்தினலாவது, கண்டனமெழுதினவர்மேல் பகையினலாவது எழுதினதாகக் கொள்ளவேண்டாம். இதையூன்றிப்படித்தாலே யதுவிளங்குமாயினும் உறுதிப்பாட்டிற்காக நாமும் சொல்லிவைத்தோம்.

மேலும் நாம் சொல்லிக் கொண்டுவந்த கட்சிகள் கண்டனங்க ளெழுதுவோ ரெல்லோர்க்கும் பொதுவென்றும் வேதசமாஜத்தார் இப்படி எதிரிகளைத் தாழ்வாகப்பேசி கிழக்கதைகள்கொண்டு சமாதானஞ் சொல்லினலும், வாக்கியங்க ளோடொவ்வாத பொருள்க ளேற்படுத்தினலும், நாம் சொல்லிய விஷயங்களெல்லாம் அவர்களையுஞ் சேருமென்பதையும் எல்லோரும் அறியலாம்.

ருக்குவேத சம்ஹிதை

தொடர்ச்சி.

ச-வது ஸூக்தம். (எ.)

[தேவதை, இந்திரன், ருஷியும், பாவும் முன்போபோல]

வர்க்கம், கரு.

க. இந்த்ரமித்காதினோ ப்ருஹதிந்த்ரமர்கேபிரர்கிண:, இந்த்ரம் வாணீரநூஷத.

(ஸாமம்)பாடுகிறவர்கள் பிருகத்(தென்னும் ஸாமத்தால்)இந்திரனையே ஸ்துதிக்கிறார்கள். மந்திரங்களையுடையவர்(களாகிய ஹோதாக்கள் ருக்கு ரூபமான)மந்திரங்களால் இந்திரனை ஸ்துதிக்கிறார்கள். (யஜுர்வேதிகள் யஜூரூபமான)வாக்குகளால் இந்திரனை ஸ்துதிக்கிறார்கள்.*

உ. இந்த்ர இத்தர்யோ: ஸசா ஸம்மிஶ்ல ஆ வசோயுஜா, இந்த்ரோ வஜ்ரீ ஹிரண்யய:.

பேச்சுமாத்திரத்தால் (தேரில்) பூட்டப்படாநின்ற ஹரி (யென்னுங்குதிரை)களை இந்திரனே எங்கும் நன்றாய் ஏககாலத்தில் இசைக்கின்றனவர். * இந்திரன் வச்சிராயுதமுடையவர், சுவர்ணமயமானவர்.†

ங. இந்த்ரோ தீர்காய சக்ஷஸ ஆ ஸூர்யம் ரோஹயத்திவி, வி கோபிரத்ரிமைரயத்.

இந்திரனானவர் நெடிதாகும் கட்புலனின் பொருட்டு சூரியனை வானத்தில் ஏற்றினார் ‡ (அச்சூரியன் தன்)கிரணங்களால் மலை(சிறந்ததாகிய பூமி)யைப்பிரேரித்தார் (அதாவதுபிரகாசிப்பித்தார்)

ச. இந்த்ர வாஜேஷு நோ அவ ஸஹஸ்ரப்ரதனேஷு ச, உக்ர உக்ராபிரூதிபி:.

இந்திரனே, வெல்லரியநீர் வெல்லருங்காப்புகளால் எங்களை யுத்தங்களிலும், ஆயிர(க்கணக்காய் யானை குதிரை முதலியவற்றைப் பெறுதற்கேதுவானமகா)யுத்தங்களிலும் ரக்ஷியும். §

* மூலத்தில், ஸாமம், ருக்கு, யஜுசு, என்னும் வேதங்களின் பெயரில்லை. இந்தருக்கின் பதங்களின் பொருள் வருமாறு :—.

க. இந்த்ரம் = இந்திரனை.

உ. இத் = ஏ.

ங. காதின: = பாடுவோர்.

ச. ப்ருஹத் = பெரிய.

ரு. இந்த்ரம் = இந்திரனை. [ற்றால்.

சா. அர்கேபி: = அர்ச்சைக்குரிய வ

எ. அர்கிண: = அர்ச்சைக்குரிய வற்றை யுடையினர்.

அ. இந்த்ரம் = இந்திரனை.

கூ. வாணீ: = வாக்கினால்.

க0. அநூஷத = புகழ்கிறார்கள்.

இதில் ச-ம் மொழி ப்ருஹத் என்னும் ஸாமத்தைக் குறிக்கிறதெனறும், அது ங-ம் வேற்றுமையதாயினும், உருபு மயக்கத்தால் முதல் வேற்றுமையில் வந்திருக்கின்றதென்றும், உரையில் சொல்லப்பட்டிருக்கிறது. அது சகஜமாய் ங-ம் அல்லது ரு-ம் மொழிக்கு விசேஷணமாகும், அல்லது 'மிகுதியாய்' என்னும் பொருளில் க0-வதுக்கு விசேஷணமாகலாம்.

சா-வதற்கு மேற்கூறியது இயற்கையான பொருள். அதற்கு மந்திரம், தேவதை, அன்னம், மரம் என்னும் நான்கு அர்த்தங்கள் பொருந்துமென மற்றோரிடத்திற் சொல்லியிருக்கிறது.

* மிஶ்ல: = கலக்கிறவர், சேர்க்கிறவர், இவ்விடத்தில்கட்டுகிறவர்யென்று கொள்க.

† சர்வாபரண பூஷிதர் என உரையில் சொல்லப்பட்டிருக்கிறது.

‡ விருத்திராசுரனானவன் உலகத்தின்மீது இருளை விழுத்தினபோது, அதை நீக்கி பிராணிமாத்திரர்களுக்கு திருஷ்டியை நிலைநிருத்தும்படி இந்திரனானவர் சூரியனை ஆகாசத்தில் ஸ்தாபித்தார் ; என்று ஒரு கதையுண்டு.

§ இந்தக் கடைசிவாக்கியம் = "கோக்களால் அத்திரியை ஐரித்தார்" கோ = கிரணம், வாக்கு, ஜலம். அத்திரி = மலை,மேமேகம், சூரியன். ஐரி = நடத்து, செலுத்து, பிரேரி. இதில் 'இந்திரன்' என்பதைவிட வேறு எழுவாய் வரித்து சொல்லப்படவில்லை. பாஷ்யத்தில் "இந்திரன் ஜலத்தால் மேகத்தைப் பிரேரித்தார்" என்றும் பொருள்செய்யலாமென்று சொல்லப்பட்டிருக்கிறது. 'கிரணங்களால் மேகத்தைச் செலுத்தினார்' என்பதும் பொருந்துமென்று தோற்றுகிறது.

ரு. இந்த்ரம் வயம் மஹாதந இந்த்ரமர்ப்பே ஹவாமஹே, யுஜம் வ்ருத்ரேஷு வஜ்ரிணம்.

(நமக்குத்)துணைவரும், பகைவர்களடையுங்கால் வச்சிராயுத மேந்துகின்றவருமாகிய இந்திரனை நாங்கள்பெரும்பொருளின்பொருட்டும்,சிறுபொருளின்பொருட்டும் * கூப்பிடுகிறோம்.

வர்க்கம். கச.

சு. ஸ நோ வ்ருஷந்நமும் சரும் ஸத்ராதாவந்நபாவ்ருதி, அஸ்மப்யமப்ரதிஷ்குத:.

(மழையைப் பொழிகின்றவரே! (எங்கட்காமங்களை யெல்லாம்)ஒருமிக்க க்கொடுக்கின்றவறே! அப்படிப்பட்டநீர், மாறுமொழியாதவருய்† இந்தமேகத்தை எங்கள் பொருட்டு த்திறந்துவிடும்.

எ. துஞ்ஜேதுஞ்ஜேய உத்தரே ஸ்தோமா இந்த்ரஸ்ய வஜ்ரிண:, நவிந்தே அஸ்ய ஸுஷ்டுதிம்.

அந்தந்தக் கொடை(களையளிப்பவர்களாகிய மற்றத் தேவதை)கள் விஷயத்தில் எந்தஸ்தோத்திரங்கள் மிகவும் மேலானவைகளோ, அவைகள் வச்சிரதாரியாகியஇந்த இந்திரனுக்கு(த்தகுதியான) நல்லஸ்துதியென நானறியேன்.

அ. வ்ருஷா யூதேவ வம்ஸக: க்ருஷ்டீரியர்த்யோஜஸா, ஈஶாநோ அப்ரதிஷ்குத:.

வலியரும், மாறுமொழியாதவருமாகிய (காமங்களை)வர்ஷிக் கின்றவர், (மாட்டுமந்தைகளைக் காளையானதுஎப்படியோ அப்படி தன்பலத் தினல்(அனுக்கிரகிக்கும்பொருட்டு,)பிரஜைகளை யடைகிருர்.

கூ. ய ஏகஶ்சர்ஷணீநாம் வஸூநாமிரஜ்யதி, இந்த்ர: பஞ்ச க்ஷிதீநாம்.

எவர், ஒருவராய், மனிதர்களையும் பொருட்களையும் ஆளுகிருரோ அந்த இந்திரனவர் பஞ்சமர் * களுக்கிருப்பிடமாகிய சாதிகளை (அனுக்கிரகிப்பவர்.)†

கO. இந்த்ரம் வோ விஶ்வதஸ்பரி ஹவாமஹே ஜநேப்ய:, அஸ்மாகமஸ்து கேவல:.

(ஒய்ருத்துவிக்கு யஜமானர்களே)சுற்றிலுமிராநின்ற எல்லாச் சனங்களினின்றும் இந்திரனை (நாம்) கூப்பிடுகிறோம்-(அவர்) நமக்கேயுரியவராயிருப் பாராக.

* அர்ப்பே சகஜமாய் குழந்தையின் பொருட்டென்று அர்த்தமாகும்.

† எங்கட் பிரார்த்தனைகளுக்கு 'இல்லை'என்னும் மாறுத்தரஞ் சொல்லாதவர்.

பழமொழிகள்.

கங்கையிலே முளைத்தாலும் பேய்ச்சுரை நல்சுரையாமா?

கங்கையில் முழுகினுலுங் காக்கையன்னமாகுமா?

கசடருக்கில்லை கற்றோருறவு.

கசடானகல்வியிலுங் கல்வியீனம்நலம்.

கடல்கொதித்தால் விளாவநீரெங்கே?

கடல் நிறைந்தென்ன காஞ்சிரை பழுத்தென்ன?

கடல்தாண்டஆசையுண்டு கால்வாய்த்தாண்டக்காலில்லை.

கடலைத்தூர்த்துங் காரியம் முடிக்கவேணும்.

கடல்பெருகினுல் கரையேது.

கடலிலிட்ட பெருங்காயம்.

* பஞ்சமர் = ஐந்தாஞ்சாதியார், பிரம்ம க்ஷத்திரிய வைசிய சூத்திரர்களென்னும் நான்கு வர்னங்களில் சேராத சண்டாளர் முதலியவர்.

† பஞ்சக்ஷிதி என்பதற்கு 'பஞ்சமர்களினிருப்பிடம்' என உரை செய்யப்பட்டிருக்கிறது. அதற்கு இயற்கையாய் 'ஐந்நிலத்தார்' எனப் பொருளாகும். இந்த ருக்குக்கு "எவர் ஒருவர் ஐந்நிலத்தாராகிய மனிதர்களின் பொருளை யாளுகிருரோ அந்த இந்திரன்" எனப் பொருள்செய்து முன் ருக்குடன் அநுவயமாக்கலாம்.

விளம்பரம்.

தமிழிலும், கிரந்தத்திலும், மணிப்பிரவாளமாய் குனுக்கரம்பாக்கம் - கோபாலாசாரியரால் அச்சிடப்பட்ட தனிசுலோகி முதல்சம்புடம் நேராய் வாங்குவோருக்கு பிரதி ஒன்றுக்கு விலை ரூபாய் - உ. தபாலில் அனுப்பப்படும்பக்ஷத்தில் பிரதி யொன்றுக்கு தபால்கூலி அணா - உ. பத்துபிரதிகளுக்கதிகம் வாங்குவோருக்குத் தபால் கூலியில்லாமல் அனுப்பப்படும்.

☞ இது தத்துவபோதினி அச்சுக்கூடத்தில் விற்கப்படுகிறது.

புஸ்தகவிளம்பரம்.

சென்ற வருஷம் கக - வது நெம்பர் தத்துவபோதினியில் விவரித்தவாறு இயற்றப்பட்ட பாலவியாகரணம் என்னும் கிரந்தம் கிரந்தத்திலும் தமிழிலும்மணிப்பிரவாளமாக அச்சிடப் பட்டுஸித்தமாக இருக்கிறது. இதின்விலைபிரதியொன்றுக்கு ச-அணாவாகிறது. வெளியுலுள்ளவர்கள் தபால்கூலிக்காக க-அணா சேர்த்து அனுப்பவேண்டும். பத்துபிரதிகளுக்கு அதிகம் வாங்குவோருக்கு தபால்கூலி யன்றியே அனுப்பப்படும். இதற்காக தபால்முத்திரை ரூபமாக பணம் அனுப்புவோர் ரூபாய்க்கு க-அணாவீதம் மாற்பு வட்டம்சேர்த்து அனுப்பவேண்டும். இதுதவிர இதரக்கிரந்தங்களும் அச்சாய்க்கொண்டு வருகின்றன.

விளம்பரம்.

தத்துவபோதினிக்குக் கையொப்பம்செய்பவர்கள்அனுப்புந்தொகைச் சேர்ந்ததைக்குறித்து, உத்தரப் பிரத்தியுத்தரங்கள் வைத்துக்கொள்ள அனுகூலப்படவில்லை யாகையால், அந்தந்த மாதத்தில் வரும் கையொப்பங்களைக் குறித்து, மருமாதம் தத்துவபோதினியில் ஒரு அட்டவணைப் பிரசுரம் செய்யப்படும். கடந்த மாதத்தில் வந்த சந்தாதாரர்களுக்கு அட்டவணை வருமாறு,

சந்தாதாரர்களுடைய அட்டவணை.

சென்னை கா - வேதாசலமுதலியார்... ...க
" கிருஷ்ணன்.........................க
சஞ்சி - கோழியாலம் - திருவேங்கிடாசாரியர்..................................க
கொள்ளேகாலம் - தாசில்தார்............க
,, இராமசெந்திரராயர்... ... ...க
,, மிடர - மகன்ஷி...............க
,, வைதீசுவரஅய்யர்... ... ...க
,, இராமராயர்... ... . க
,, ஸ்ரீனிவாசாசாரியர்............க
,, சாமராயர்........... ... .க
,, நாகப்பையர்...... ...., ...க
,, வெங்கிடசுப்பையர்... ....க
,, அளகிரிஅய்யர்..................க
,, வெங்கிடரமணய்யர்...... ...க
,, இராகவேந்திரராவு............க
,, கிருஷ்ணய்யர்..................க
,, அப்புசெட்டியார்... ....க
,, ஸ்ரீனிவாசராவு... ....க
,, ஜீவனராவு... ....க
,, அப்புராவு......... ....க
,, வெங்கடநாரணய்யர்...... ...க
,, சந்திரசேகரம்பிள்ளை... ......க
,, வக்கீல் - கிருஷ்ணய்யர்......க
,, கிருஷ்ணசாமிப்பிள்ளை ... ...க
,, வக்கீல்சந்திரசேகரம்பிள்ளை க
,, செம்பகவுண்டண் ....க
,, வெங்கிடநாரணையர் ....க
,, இராமசாமய்யர்... ... ...க
பெங்களூர் -மி -குமாரசாமிநாயுடு ... ...க
,, ஆ - வெங்கடாசலமுதலியார்... க
கூடலூர் - சேஷயயர்.............. ......க
நெல்லூர் -தொரைசாமிமுதலியார்... ...க
,, இரத்தினமுதலியார்...... ...க
,, வரதாசாரியார்... ....க
,, நாராயணசாமிமுதலியார்... க
பல்லாரி - குருசாமிப்பிள்ளை... ....க
கும்பகோணம் - ரகுநாதராவு... ....க
சென்னை - ஜான் - வாலெஸ்...............க
,, ரெவரெண்டு - பெர்ஸிவல்...க

దేవస్తుతి.

జ్యాగడరాగం_రూపకతాళం.

పల్లవి.

నాన్యఃపంథావిద్యతే - అయనాయ - నాన్యఃపంథావిద్యతే.

అనుపల్లవి.

యాన్యవద్యాని - కర్మాణితాని
సేవితవ్యాని - నోఇతరాణి...............(నాన్యః)

చరణములు.

౧. అశబ్దమస్పర్శ - మరూపమవ్యయం
తథారసంనిత్య - మగంధవచ్చయత్
అనాద్యనంతంమ - హతఃపరంధ్రువం,
నిచాయ్యమృత్యు - ముఖాత్ ప్రముచ్యతే............(నాన్యః)

౨. నసందృశేతిష్ఠ - తిరూపమస్య
నచక్షుషాపశ్య - తికశ్చనైనం
హృదామనీషా - మనసాభిక్లృప్తః
యఎతద్విదుర - మృతా స్తేభవంతి...... ....(నాన్యః)

3. సఏషాంత - హృదయఆకాశః
తస్మిన్నయంపురు - షోమనోమయః
అమృతోహిరణ్మయఆ - కాశశ్శరీరంబ్రహ్మ
సత్యాత్మా ప్రాణా - రామంమనఆనందం............(నాన్యః)

தனியான, ஒப்பற்ற, மெய்யறிவனந்த பிரும்மம், சாந்திபூர்ணம், அமிருதம், அது உருவும் குற்றமுமற்றது. இதையறிந்தவர் அமிருதராவார்; மற்றவர் துக்கமேயடைவார்.

மெய்யேவெல்லும், பொய்யல்ல.

சென்னப்பட்டணம்;—தத்துவபோதினி அச்சுக்கூடத்தில், கா. தெய்வசிகாமணி முதலியாரால் பதிப்பிக்கப்பட்டது.